REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER. T'Phone: 805

# ஈழகேசரி

தேசிய வார வெளியீடு

தாபகர்: நா. பொன்னையா

| மலர் 22 | சுன்னாகம், நந்தன வைகாசி கூ 25-5-52 ஞாயிறு (காந்தி ஆண்டு 83) | இதழ் 44 |
|---|---|---|

சாம்பசிவம் அன்ட் கோ.
38 கஸ்தூரியார் வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம்

H. M. V. றேடியோ
H. M. V. கிராமபோன்
H. M. V. றெக்கோட்டுகள்
விற்பனைக்கிருக்கின்றன

N. SAMBASIVAM & Co.,
38, Kasturiyar Road, Grand Bazaar, JAFFNA

★ வாக்காளப் பெருமக்களிடம் ஏற்பட்டிருக்கும் அரசியல் விழிப்புணர்ச்சியைக் கவனிக்குமிடத்து இத் தடவை தேர்தல் முடிவுகளைப் பற்றி ஸ்திரமான நம்பிக்கை வைப்பது கஷ்டமாகவே இருக்கிறது.

# மாலை வரும் முன்னே அவர் வருவார் பின்னே!

## மக்களை ஏமாற்றுங் கும்பல்

## தமிழ்க் கலாசாரத்துக்கு ஆபத்து!

நமது நிருபர்

யாழ்ப்பாணம், 23-5-52

தேர்தல் அபேட்சகர்களிற் பலர் சுய விளம்பரத்திலும், தம்மைப்பற்றி மற்றையோர் பெரிதாக எண்ணவேண்டுமென்பதற்காகவும், எவ்வளவு தூரம் ஏளனத்திற்கிடமாக நடக்கின்றனரென்பது பாலர் முதற் பாட்டிமார்வரை அறிந்த பகிரங்க இரகசியமாகிவிட்டது. அபேட்சகர் ஒருவர் தமது பிரசாரக் கூட்டத்திற்காக மற்றைய தொகுதிகளிலிருந்து ஐம்பதுக்கு மேலான கார்களில் ஆட்களை ஏற்றிவந்து கூட்ட மைதானத்தை நிரப்பியதுடன் ஆங்காங்கு தன் கழுத்தில் போடுவிப்பதற்காக ஏராளமான மாலைகளையும் ஒரு காரிற் கொண்டுவந்திருந்தார். அதுமட்டுமன்றி இவரது ஊர்வலத்தின்போது மேசையொன்றும் பின்தொடர்ந்து சென்றுகொண்டிருந்தது.

மாலை கொடுத்து மேசை கொடுத்து மரியாதை பெற முயலும் இவர்களது கௌரவம் எத்தன்மையதென்பதை வாக்காளர் அறியாமலிரார். மாலைகளில் அதிகம் செலவிட விரும்பாத மற்றோர் அபேட்சகர் தன் கழுத்திற் போடப்பட்ட மாலைகளை அடிக்கடி கழற்றிக் கையாட்கள்மூலம் முன்னுக்கு அனுப்பிக்கொண்டிருந்தார். அபேட்சகரின் மாலை வரும் முன்னே அவர் வருவார் பின்னே என்ற புதுமொழிப்படி இந்தக் கசங்கிய மாலைகள் ஒவ்வொன்றும் பத்துத் தடவைக்குமேல் அவரது கழுத்தை அலங்கரித்தன. மாலை போடுவதற்கான ஆட்களைச் சேர்ப்பதில் உள்ளூர்க் கூட்டுறவு ஸ்தாபனமொன்றின் நிர்வாகியும் தமிழ்ச் சட்டம்பியார் ஒருவரும் சிட்டாய்ப் பறந்து திரிந்தனர்.

சென்ற 16-ந் திகதி பத்தைமேனியில் நடைபெற்ற கூட்ட ஊர்வலத்தின்போது பிரபல தவுல் வித்துவான் கும்பகோணம் தங்கவேலுவின் மேளக் கச்சேரியைக் கேட்கத் திரளான சனங்கள் கூடியிருந்தனர். ஆனால் மேடையில் வாய்ப்பறை தொடங்கியதும் கூட்டம் கலையத் தொடங்கிவிட்டது.

இந்தத் தேர்தல் வந்தாலும் வந்தது. இளைஞர்கள் பாடுதான் வெகு ஆபத்தாய்ப் போய்விட்டது. கொடிபிடிக்க வேண்டுமா, கோஷம் போட வேண்டுமா, சுவர்களில் சுலோகங்கள் தீட்டவேண்டுமா எல்லாம் அவர்கள் தலையிலேதான் சுமத்தப்பட்டிருக்கிறது. கட்சியென்றால் இன்னதென அறியாத குழந்தைகள் ஜே கோஷம் போட்டுத் தொண்டையைக் கிழித்துக்கொள்வது பரிதாபமான காட்சியாயிருக்கின்றது.

### செனேட்டர் ஓலம்

இரவு 3 மணி வரை நடந்துவந்த பிரசாரக்கூட்டங்களுக்கு யாழ்ப்பாண நகரத்தைப் பொறுத்தவரையிலாவது பொலீசார் முற்றுப்புள்ளிவைத்துவிட்டனர். இரவு 10 மணியின் மேல் கூட்டங்களில் ஒலிபெருக்கி உபயோகிக்கக்கூடாதெனத் தடுக்கப்பட்டிருப்பதால் ஒரேயொரு காட்சியுடன் மட்டும் இந்தப் பிரசாரக் கூட்டங்கள் முடிந்துவிடுகின்றன. சென்ற 19-ந் திகதி ஜின்னா மைதானத்தில் செனேட்டர் நடேசன் தமது போதனையை நிகழ்த்திக்கொண்டிருக்கையில் திடீரென்று ஒலிபெருக்கி நிறுத்தப்பட்டதால் அவர் திகைத்துப்போய் அதற்குக் காரணமும் ஜி. ஜி. தானென்று ஓலமிட்டார். குருநகர் பொதுமேடைக்கூட்டத்தின் எதிரொலியே இப்புதிய சட்டமெனத் தெரிகிறது.

தமிழ்க் காங்கிரஸ் யு. என். பிக்கு ஆதரவு தேட ஜனாப் ஏ. எம். ஏ அஸீஸ் யாழ்ப்பாணம் வந்ததைத் தொடர்ந்து பழைய எம். பி. – ஜனாப் ஏ. அஸீஸ் தமிழரசுக்கு முட்டுக்கொடுக்கச் சமீபத்தில் வந்திருக்கிறார். இவர் ஒரு பாகிஸ்தான் பக்தர். இவர் சென்ற 19-ந் திகதி யாழ்ப்பாணம் ஜின்னா மைதானத்தில் தீயில் மிதித்தவரைப்போலத் துள்ளிக் குதித்தார். இவருடன் ஸ்ரீமதி ஐஷா ரவூப்பும் தோற்றியிருப்பதுடன் கூட்டத்திற்குத் தலைமையும் தாங்கினர். இந்தக் கண்டனைப்பு வேலைகளால் எங்கள் தலையில் புதிய குல்லாக்களைப் போடமுடியாதென ஒருமுஸ்லீம் பெரியார் ஒரு மூலையில் முழக்கமிட்டார். இக்கூட்டத்தின்போது ஜி. ஜி. பாராளுமன்றவீரன் என்று திரு. நாககாதன் ஒரு போடு போட்டபோது கலவரம் ஏற்பட்டு வியாபாரி ஒருவர் பொலீசாரால் அப்புறப்படுத்தப்பட்டார்.

### பாம்பு பாம்பு!

சென்றவாரம் வண்ணார்பண்ணை ஐயனார் கோவிலடியில் நடந்த தமிழரசுக் கூட்டத்திற் பாம்பொன்று இடையிற் புகுந்து அல்லோலகல்லோலப்படுத்திவிட்டது. இது பல்லில்லாத பாம்பானபடியால் தமிழ்க் காங்கிரஸின் பாம்பாயிருக்கலாமெனப் பலர் நம்பினர். கூட்டங்கள் குழப்பும் கலை இம்முறை அதிகம் வளர்ச்சிபெறவிட்டாலும் அக்கலையின் ஆரம்ப கர்த்தா மீதும் திரும்பிப் பாய்கிறதென்பது சமீபத்தில் குருநகர் கூட்டமொன்றில கற்கள் சில பறந்ததிலிருந்து புலனாகிவிட்டது.

வாக்காளப் பெருமக்களிடம் ஏற்பட்டிருக்கும அரசியல் விழிப்புணர்ச்சியைக் கவனிக்குமிடத்து இத் தடவை தேர்தல் முடிவுகளைப் பற்றி ஸ்திரமான நம்பிக்கை வைப்பது கஷ்டமாகவே இருக்கிறது. ஆதரவும அனுதாவும் ஒவ்வோர் அபேட்சகர் பக்கமும் அடிக்கடி சுழன்றுகொண்டேயிருக்கின்றன. சில தொகுதிகளில வெற்றி தோல்வி பல நூறு வாக்குகளுக்கிடையிலே தான் ஏற்படும் என்பது மட்டும் உறுதியாகத தெரிகிறது. சென்ற தேர்தலைப் போன்று அதிகப்படியான ஆயிரங்களாயிருக்கலாமென்று கனவிலும் எண்ண முடியாது.

யாழ்ப்பாணத் தொகுதியில் இம்மாதம் 28-ந் திகதி வாக்காளர்கள் தங்கள் உரிமைகளைப் பிரயோகிப்பார்கள். முஸ்லீம் வட்டாரத்தில இம்முறை 1500 வாக்காளர் வரை வாக்காளர் டாப்பில இடம் பெறவில்லை யெனத் தெரிகிறது. திரு. பொன்னம்பலத்தை விழுத்திவிட வேண்டுமென இளம் உள்ளங்கள் துடித்துக் கொண்டிருக்கின்றன. ஜி.ஜி. இல்லாவிடின் மற்றைய தமிழர்கள் பாராளு மன்றத்திற்குப் போவதிலும் பார்க்கப் போகாமல் விடுவதுதான் நல்ல

(தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க)

# தேர்தற் கோட்டை

● "அடே! விடடா!!" "யாரையெடா, அடேயென்றாய்? இது என்னுடையது." "பாத்திட்டுத் தாரேன்ரா." "போடா போ!"

இப்படி யாழ்ப்பாணம் பெரிய கடை மிட்டாய்ச் சந்தியில் சிறுமட்டங்கள் இருவர் நின்று இழுபறிப்பட்டுச் சண்டை போட்டனர். மறுகணம் ஒரு கூட்டம் அவ்விடத்திலே திரண்டுவிட்டது. அப்படியென்ன தலைபோகும் காரியமா இது என்று நினைத்து அங்கு கூடியவர்களுக்கு, அச்சிறுவரின் குட்டிச் சண்டை மிகுந்த ஏமாற்றத்தை உண்டுபண்ணியது. எல்லாம் காற்றோடு பறந்துவந்த ஒரு தேர்தற் பிரசுரத்துக்காகவேதான். அப்பிரசுரத்தை மிஸ்டர் அணுக்குண்டனுக்கு அனுப்பவேண்டுமென அச்சிறுவர்களில் ஒருவன் சண்டை போட்டான். மற்றவன் அதைத் தட்டிக்கொண்டுபோய்விட முயற்சித்தான். "சண்டைபோட வேண்டாம். இதோ! நான்தான் சாட்சாத் அணுக்குண்டு" என்று கூறித் தொப்பென்று குதித்தேன். தப்பினோம், தப்பினோம் என்று சொல்லி அத்தனை பேரும் மிட்டாய்க் கடைப் பிற்கதவால் ஓட்டம் பிடித்தனர்.

● பாருங்கள் மிட்டாயிலும் பார்க்கத் தேர்தல் கால இலக்கியத்திற் சுவைகண்டுவிட்டனர் யாழ்ப்பாணத்து இளமட்டங்கள். இவர்களுக்கு இத்துறையில் ஆர்வம் ஊட்டி வருபவர்கள் பென்னம்பெரிய அபேட்சகர்கள் தாம். 'யாழ்ப்பாணத்து வாக்காளர்களுக்கு என மகுடமிட்டுத் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்கள் போற்றல் தூற்றல் என்பன பற்றிப் போதிப்பதாவது: "சனசமூக சேவையில் ஈடுபடும் ஒவ்வொருவரும் பிறரால் தூற்றப்படுவதும் போற்றப்படுவதும் இயல்புதான். ஆயின் தூற்றுபவரின் வசைமொழிகளையோ, போற்றுபவரின் புகழ் மொழிகளையோ பொருட்படுத்தாது, சமூக சேவை ஒன்றையே நோக்கமாகக் கொண்டு உழைப்பது எனது இலட்சியம்." இந்த ஆலாபனையுடன் செனேட்டர் நடேசனைத் தன்மீது சுமத்தும் குற்றங்களைக் கையெழுத்துடன் பிரசுரிக்குமாறு திரு. ஜி. ஜி. கேட்டிருந்தார்.

● அணுக்குண்டு ●

● செனேட்டர் நடேசன் இந்த மாதிரியான சந்தர்ப்பங்களைத் தனக்குச் சாதகமாகக் கொண்டு எதிரிகளைப் புடைப்பதில் ஆள் ஒரு சரியான புலி. எனவே, செனேட்டர் நடேசன் திரு. பொன்னம்பலத்தின் மீது எட்டுக் குற்றச் சாட்டுகளைத் தமது கைச்சாத்துடன் தீட்டியிருக்கின்றார். அவற்றுள் ஒன்று இது: "திரு. பொன்னம்பலம் பல முறைகளில் எங்கள் தேசியத இட்டத்துக்கு மாறாக நடந்து அதன் நிமித்தம் எங்கள் சாதிக்கே அவமதிப்புத் தேடிக்கொண்டார்."

● 'திரு. நடேசன் தன் கையை விரிக்கிறார்' என்று கூறித் திரு. வி. க. கனகரத்தினம் என்பவர் ஆங்கிலத்திலும் தமிழிலும எழுதி வெளியிட்டுள்ள பிரசுரத்தில் ஒரு பகுதியைப் படித்துப் பார்க்கவும்: "செனேட்டர் நடேசன மலிவு 'மார்க்கெட்'டில் பெற்ற தியாகியை இட்டு நான் சற்றேனும் அழுக்காறு கொள்ளவில்லை. அவரை அகில இலங்கையும் அறியும். யாழ்ப்பாணத்தில் அவர் தான் யாரென்பதை நாளுக்குநாள் அபரபக்கத்துச் சந்திரனைப் போற் காட்டிவருகிறார். அவருடைய அரசியற் கொள்கை நம்பமுடியாதது ...... அவர் தனது சாமர்த்தியங்களைச் சமஷ்டி அரசியற் கட்சியாரின திருவடியிற் சமர்ப்பித்தது மாத்திரம் விளங்கிக் கொள்ளக் கூடியது......"

● இதற்கு திரு, அ. இ. ஆசீர்வாதம் என்பவர் அறையும் பதிலைக் கேளுங்கள்: "தமிழ் மக்கள் சுதந்திரத்துடனும், பொருளாதார சுபிட்சத்துடனும் தமது தேனி

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

# நடேசனுக்கு ஆதரவு

## அளவெட்டி மக்கள் அபிமானம்

காங்கேசன்துறைத் தொகுதி அபேட்சகர் திரு. சு. நடேசபிள்ளை அவர்களை ஆதரிக்கும் நோக்கமாக அளவெட்டியில் சென்ற 18-5-52ல் ஒரு மாபெருங் கூட்டம் நடைபெற்றது. திரு. சு. நடேசபிள்ளை அவர்களை அளவெட்டி அளகொல்லைப் பிள்ளையார் கோயிலிலிருந்து ஊர்வலமாகக் கூட்டம் நடைபெற்ற மைதானத்திற்கு மக்கள் அழைத்துச் சென்றனர். வழி நெடுக மக்கள் பூரண கும்பங்கள் வைத்துக் குத்து விளக்கேற்றித் திரு. சு. நடேசபிள்ளை அவர்கட்கு மலர் மாலைகள் சூட்டி ஆசீர்வதித்தார்கள். "நடேசன் வெல்க!" என்ற மக்களின் இதய பூர்வமான கோஷம் வானைப் பிளந்தது. கூட்டத்துக்குத் திரு. எஸ். இளையதம்பி (வழக்கறிஞர்) அவர்கள் தலைமை வகித்தார்கள். அவர் தமது தலைமையுரையில் இன்றைய அரசியற் கட்சிகள் நிலைமை பற்றி விரிவாக எடுத்துச் சொன்னார். தமிழரசுக் கட்சித் தலைவர் இடதுசாரிகள் பக்கமாகப் போய்க்கொண்டிருப்பதைத் தாம் உணருவதாகவும் அந்த ஆபத்திலிருந்து தப்புவதற்காக வாக்காளர் யு. என். பி. யை ஆதரிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள்.

திரு. எம். பாலசுந்தரம் (நியாயவாதி) அவர்கள் தமக்குரித்தான நகைச் சுவையுடன் பேசும்போது ஒரே நாளில் 4, 5 மேடைகளில் கத்தித் திரியும் அரசியல் ஞானமில்லாதவர்களின் தொண்டைகளுக்கு விளக்கெண்ணெய்யும் அப்படிப்பட்டவர்களை வைத்துக்கொண்டு கூலிக்கு மாரடிக்கச் செய்யும் அரசியற் கட்சிகளுக்கு அரப்பெண்ணெய்யும் தேவைப்படும் என்றார். அத்துடன் தமிழரசுக் கட்சியின் பாகிஸ்தான் கொள்கைகளையும் விளக்கிக் காட்டினார்கள்.

திரு. சு. நடேசபிள்ளை அவர்கள் தமது உருக்கமான பேச்சிற் குறிப்பிட்டதாவது :— "இன்று தலைமை தாங்கும் திரு. எஸ். இளையதம்பி அவர்கள் அரசியல் ஞானக் கண்களிற் படிந்திருந்த மாசை அகற்றக் கூடியதாகப் பேசினார்கள். ஆகவே, அவரை ஒரு பெரிய கண்பரிகாரியார் என்றே நான் கூறுவேன். ஊனக் கண்களிற் படியும் மாசை அகற்றுவதிலும் பார்க்க ஞானக் கண்களிலுள்ள மாசை அகற்றுவதே பெரும் சேவையாகும். இருபது ஆண்டுகட்கு முன் அரசியலில் ஈடுபடும்போது எனது முதற் பேச்சை அளவெட்டியிலேயே நான் ஆரம்பித்தேன். அதே நாளில்கூறியதேவாரம் இன்றும் எனக்கு ஞாபகம் வருகிறது.

"செந்தமிழ்ப் பயன் அறிகிலா அந்தகர்......" என்பதே அது. தமிழ் என்ற பெயரை வைத்துக்கொண்டு மக்களைப் பிழையான வழியிற் கொண்டு செல்லப் பார்ப்பவர்கள் இன்று தோன்றியது புதுமையல்ல. என்னைத் தமிழருக்குத் துரோகம் செய்துவிட்டதாகக் குற்றம் சாட்டுகிறார்கள். என்னுடைய முப்பது வருடகாலச் சேவையில் தமிழே முதலிடம் பெற்றுள்ளது. அரசியற் சேவை என்னுடைய இரண்டாவது அல்லது மூன்றாவது இலக்கு. சற்றேனும் ஒவ்வாத பல அவதூறுகளை என்மீது சுமத்துகிறார்கள். அவற்றில் ஒன்றுவது பொருத்தமானதல்ல. நான் இந்தியர்க்குத் துரோகம் செய்துவிட்டேனும்! அது எப்படி முடியும். 'இரத்த பாசம்' என்று சொல்வார்களே. அது துரோகம் செய்ய என்னை விடுமா? இலங்கை இந்தியர் காங்கிரஸ் தலைவர்கட்கு நான் எத்தனையோ முறைகளிற் புத்தி கூறியதுண்டு. அவர்கள் அதைக்கேட்கவில்லை. அந்தத் தலைவர்களின் தவறுகளாலே தான் இங்கு உள்ள இந்திய மக்கள் இன்று கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் பாவம் ஒன்றும் அறியாதவர்கள்! நான் பாராளுமன்றத்திற்குச் சென்ற முறை போகாதிருந்த காலத்து இந்தியர்க்குத் துரோகம் செய்ததாக எப்படி என்மீது பழி சுமத்த முடியும்? வாக்காளர்களாகிய நீங்கள் இம்முறை என்னை அனுப்பினால் உங்கள் முன்னேற்றத்திற்கு என்னால் ஆனமட்டும் உழைக்க முயல்வேன். உங்கள் சக்தியால் நான் வெற்றி பெற முடியுமென நம்புகின்றேன்."

செனேட்டர் எஸ். ஆர். கனகநாயகம், திரு. ஆர். என். சிவப்பிரகாசம் உட்பட வேறும் பல அறிஞர்கள் பேசினார்கள்.

—நிருபர்.

புத்தகங்கள், பத்திரிகைகள், விற்பனையாளர்கள்.
தமிழ்ப்பண்ணை
யாழ்ப்பாணம். இலங்கை.

இலங்கை அரசாங்க ஈட்டு வங்கி
THE CEYLON STATE MORTGAGE BANK

இந்த அரசாங்க ஈட்டு வங்கியிற் கடன்கள், பத்திரங்கள் மூலம் அசைவற்ற காணிகளின் பிணையிற் கீழ்க்காணும் விஷயங்களுக்குச் செலவுசெய்யும் பொருட்டுக் கொடுக்கப்படும்.

(1) கமத்தொழில் விஷயங்களுக்கும்,
(2) கட்டிடங்கள் கட்டுவதற்கும், விலைக்கு வாங்குவதற்கும், குத்தகைக்கு எடுப்பதற்கும்.
(3) மேற்காட்டிய விஷயங்களின் பொருட்டுக் கடன் வாங்கி யிருந்தால் அக்கடனைத் தீர்ப்பதற்கும்.
(4) ஏதாவது கட்டடங்கள் அல்லது காணியின் பேரிலுள்ள ஈடு மீளுவதற்கும்.

வட்டி விபரம் பின்வருமாறு :— கடன் எடுக்குந் தொகை 5,000 ரூபாவுக்குக் குறைந்திருந்தால் 6 வீத வட்டியும்; 5,000 ரூபாவுக்குக் கூடியும் 10,000 ரூபாவுக்குக் குறைந்துமிருந்தால் 5½ வீத வட்டியும்; 10,000 ரூபாவுக்குக் கூடியும் 50,000 ரூபாவுக்குக் குறைந்துமிருந்தால் 5 வீத வட்டியும்; 50,000 ரூபாவுக்குக் குறையாதிருந்தால் 4½ வீத வட்டியுமாம்.

கடன்கொடுக்கும் குறைந்த தொகை 2000 ரூபாவாகும். விபரங்கட்கு 'மனேச்சர்', இலங்கை அரசாங்க ஈட்டு வங்கி, இல. 91, ஹோட்டன்பிளேஸ், கொழும்பு, என்ற விலாசத்திற்கு எழுதி அறியவும்.

[4585]

சகல பயிர்களுக்கு
C C C பசளைகள்

இலங்கையின் பசளை வியாபாரத்தில்
40 வருடகால அனுபவத்தின் பயனாக

நாங்கள்
C C C
கலவைப் பசளைகளை

தரக்கூடியவர்களாக இருக்கிறோம். இவை இலங்கையில் எல்லாப் பாகங்களிலும் எல்லாப் பயிர்களுக்கும் ஏற்கக்கூடியதாக எமது கமத்தொழில் நிபுணர்களால் விஞ்ஞான முறைப்படி தயாரிக்கப்பட்டவை.

இந்தக் கலவைகள் முழுவதும் மிகவும் உயர்தரமானவை; உத்தரவாதத்துடன் பரிசிலனை செய்யப்பட்டு விற்கப்படுகின்றன. இவைகள் தற்கால யந்திரங்கள் மூலம் கலந்து நெரிக்கப்பட்டிருக்கின்றன. எமது கமத்தொழில் நிபுணர்கள் உங்களுக்கு இலவசமாக ஆலோசனை கூறுவார்கள்.

கொழும்பு
கொம்மேர்ஷல்
கொம்பனி,
லிமிற்றெட்.

பசளைக்கு ஒழுங்கு செய்யும்போது கொழும்பு கொம்மேர்ஷல்கொம்பனியார் விற்கும் C C C கலவைப் பசளையையே பார்த்து வாங்குங்கள்.

[பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டு, அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது.]

The
Colombo
Commercial
Company,
LIMITED.

INCORPORATED IN
GREAT BRITAIN
LIABILITY OF MEMBERS Ltd.

தந்தி: COSSACK. தபாற்பெட்டி இல. 33. பேசுந்தந்தி இல. 5351.

[4587]

★ இவ்வம்மையார் வகுத்த குழந்தைக் கல்வி முறை கையாளப்படாத நாடு உலகில் கிடையாதென்றே கூறிவிடலாம்.

# மாதரசி மொன்ரிஸோரி குழந்தைகளுக்குத் தந்த கல்வி

கல்வி யுலகிற் பெரும் புகழ் படைத்த மொன்ரிஸோரி யம்மையார் சமீபத்திலே தமது 80-வது வயதில் இவ்வுலக வாழ்வு ஒருவினர். குழந்தைகள் உள்ளத்தை நன்கு ஆராய்ந்தறிந்து அவர்கட்கேற்ற சிறந்தவோர் கல்வி முறையை வகுத்துக்கொடுத்த இம் மாதுசிரோமணிக்கு உலகம் முழுவதும் நன்றி பாராட்டும் கடமைப்பாடுடையது.

இவ்வம்மையார் இத்தாலி தேசத்தில் பிறந்தவர். இவர் பிறக்க ஒரு மாதத்துக்கு முன்னரே சின்னாபின்னப்பட்டுச் சிதைந்திருந்த இத்தாலி தேசம் ஒற்றுமையும் பெலமும் அடைந்து பூரண சுதந்திரமுடைய நாடாயிற்று. எனவே, இவர் அரசியற் பிணக்குகள் நீங்கிய நாட்டில் உதித்தமையாற்றான் கல்வித் துறையிற் புகழுடன் உழைக்கக் கூடிய ஆற்றலையும் தகுதியையும் பெறலாயினர். முதல் முதலாக வைத்தியங் கற்று அதிற் பெரும் பாண்டித்தியம் பெற்று நாட்டிற்கு அருந்தொண்டாற்றிவந்தனர். பின்னர் அரசியற்றுறைகளில் ஈடு பட்டுப் பெண் மக்களின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் பெறுதற்கு இடைவிடாது வாதாடிவந்தனர். இத்தாலி தேசப் பெண்மணிகள் முதன்மை யடைந்து முன்னேறியதற்கு இவ்வம்மையாரின் இடைவிடாத உழைப்புப் பெருந்துணையாயிற்று. இத்தாலி தேசத்திலுமன்றி உலகில் எல்லா நாடுகட்குஞ் சென்று பெண்கள் பலவழியிலும் சீரும் சிறப்பும் அடைய வேண்டுமென்று எடுத்துக்காட்டிப் பிரசாரஞ் செய்துவந்தனர்.

## கல்வி ஆராய்ச்சி

இவ்வாறு பலதுறைகளில் அரும்பணியாற்றி மதிப்பினைப்பெற்றுவந்த அம்மையார், 1906-ம் வருடம் குழந்தைகளின் கல்வியில் தமது முழுக் கவனத்தையும் செலுத்துவாராயினர். உரோம் நகரிலுள்ள ஏழைகளின் குடிசைகளிற் சென்று அவர் குழந்தைகட்குக் கல்வி பயிற்றும் முயற்சியில் ஈடுபடுவாராயினர். குழந்தைகளின் உள்ளத்துக்கு ஏற்ற கல்விமுறை எத்தன்மையதாக வேண்டுமென்ற ஆராய்ச்சியும் அப்போதுதான் ஆரம்பமாயது. விஞ்ஞானத் துறையிலும் சனசமூகத் துறையிலும் மிக்க அறிவும் பரந்த அனுபவமும் படைத்த இவ்வம்மையார், புதியதோர் கல்வி முறையை வகுத்து ஆசிரியர்கட்கு வழிகாட்டுவாராயினர். இக் கல்வி முறையே இப்போது குழந்தைகளைப் பயிற்றும் கல்விக் கழகங்களில் மிகச் சித்தியுடன் கையாளப் பட்டு வருகின்றது.

## புதிய முறை

பல்லாண்டுகளாக இடைவிடாது முயன்று ஆராய்ந்து வகுத்த கல்வி முறையைப் புத்தகமாக எழுதி உலகத்துக்குப் பயன்படுமாறு வழங்கியுள்ளார். இத்தாலி நாட்டிலும் மற்றைய நாடுகட்கும் நேரே சென்று தமது கல்வி முறையை ஆசிரியர்கட்கு நன்கு விளக்கிவந்தனர். ஐரோப்பாவில் மாத்திரமன்று அமெரிக்கா, அவுஸ்திரேலியா முதலிய நாடுகளிலும் மற்றைய கீழைத் தேச நாடுகளிலும் இவரது புதிய சிறந்த கல்விமுறை நடைமுறையில் கையாளப்படுவதாயிற்று. இவர் ஆசிரியர்களைப் பயிற்றுவதற்கு உரோம் நகரில் சர்வதேச புகழ்பெற்ற ஆசிரியை கலாசாலை யொன்றை ஏற்படுத்தினர். எல்லா நாடுகளிலுமிருந்து நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் இக்கல்லூரியிற் பயிலச் செல்வாராயினர்.

இப்போது இவர் ஆரம்பித்து வகுத்த கல்விமுறை உலகமெங்கும் பரம்பி ஆர்வத்துடன் கல்வி நிபுணர்களால் உவந்து ஏற்றுக் கையாளப்படுகின்றது. உலகின் பல இடங்களில் இப்போது நாற்பது பெரிய பயிற்சிக் கலாசாலைகட்குமேல் இப்புதிய முறையைப் பயிற்றும் தொண்டினை ஆர்வத்துடன் நடத்தி வருகின்ற தொன்றே இவர் கல்வி முறையின் உயர்ச்சிக்குப் பெரிய சான்றாகும்.

## உலக மதிப்பு

சர்வாதிகாரி முசோலினி இத்தாலியில் ஆதிக்கத்துக்கு வந்ததும் இக்கல்வி முறையைச் சிறிது காலம் ஆதரித்தனர். பின் எக்காரணம் பற்றியோ தெரியவில்லை இக் கல்வி முறையை முற்றாக ஒதுக்கித் தள்ளியதுமன்றி அதன் ஆரம்பகர்த்தாவாகும் மொன்ரிஸோரி அம்மையாரையும் நாடு கடத்திவிட்டனர். எனவே இவ்வம்மையார் சிறிதுகாலம் ஸ்பெயின் தேசத்திலும், பின் நீண்ட காலம் இங்கிலாந்து தேசத்திலும் வாழ்ந்துவரலாயினர். இக்காலத்திலும் தமது கல்வி முறையை விளக்குவதிலும் அதைப் பயிற்றுவதிலும் தமது காலத்தைக் கழித்துவந்தனர். சுதந்திரத்தில் நாட்டமுள்ள பிரிட்டிஷ் மக்கள் இவரை நன்கு போற்றி ஆதரித்ததுமன்றி இவர் கல்வி முறையையும் மெச்சி ஏற்றனர். இங்கிலாந்திலிருக்கும் போது தான் இவருக்கு உலகில் பெருமதிப்பும் இவர் கல்வி முறைக்குப் பெருவிருப்பமும் ஏற்படுவதாயிற்று. ஆங்கிலரின் அரசியல் ஆதிக்கம் உள்ள நாடுகளிலெல்லாம் மொன்ரிஸோரிக் கழகங்கள் பல ஏற்பட்டன. எத்தனையோ நாடுகளில் இவ்வம்மையாரின் கல்விமுறை அரசினரால் உத்தியோக முறையில் அனுட்டிக்கப்படுவதாயிற்று. இன்று இவ்வம்மையார் வகுத்த குழந்தைக் கல்விமுறை கையாளப்படாத நாடு உலகிற் கிடையாதென்றே கூறிவிடலாம்.

## இந்தியா விஜயம்

இரண்டாவது உலகயுத்தம் நடந்து வந்த காலத்தில் இவ்வம்மையார் இந்தியாவில் உறையும் சந்தர்ப்பத்தைப் பெற்றனர். சென்னைக்கு அணித்தாகவுள்ள அடையாறு என்று வழங்கப்படும் கலாபவனத்தையே மத்திய ஸ்தானமாகக் கொண்டு தமது கல்வி முறையை விருத்தி செய்து வந்தனர். அப்போது சிற்சில முறை கொழும்பு நகர்க்கு வந்து தமது கல்வி முறையை விளக்கிச் சென்றதுமுண்டு. இக்கல்வி முறையைப் பயிற்றும் ஸ்தாபனங்கள் இங்கு ஏற்படுவதற்கும் இவரேகாரணராயினர். சென்னையில் மாத்திரமன்றி கூர்ஜரத்தின் தலைநகராகும் ஆமதபாத்திலும் இக்கல்வி பயிற்றும் நிலையத்தை அமைத்து நடத்தினர். இப்போது இப்புதிய கல்வி முறையை நன்கு பயின்ற ஆயிரம் ஆசிரியர்கட்குமேல் இந்தியாவிலுள்ளார். மாணவர்களின் மனநிலையறிந்து அவர்கள் சூழலுக்கும் ஆற்றலுக்கு மேற்ப எவ்வித பலவந்தமுமின்றியே அவர்கள் பயிற்றப் படவேண்டுமென்பதும் இம்முறையின் பிரதான அம்சமாகும். பிள்ளைகளின் உடல் நிலை இக்

(தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க)

# திரு. எஸ். முருகேசு

## படாடோபமற்றவர்

தென்னிந்தியாவிலுள்ள திருப்பெருந்துறையிற் சமீபத்திற் காலமான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. எஸ். முருகேசு அவர்களைப்பற்றி அன்பர் ஒருவர் எழுதியதின் சாரம் வருமாறு:

சைவத் திருவாளர் எஸ். முருகேசு அவர்கள் இந்த மே மாதம் 14-ந் திகதி தென்னிந்தியாவிலுள்ள திருப்பெருந்துறையில் இறைவனடி எய்திய செய்திகேட்டு இங்கு அவரது நண்பர்கள் ஆறாத்துயரடைந்தனர். திரு. முருகேசு அவர்கள் நீண்டகாலசிவில் சேர்விஸ்உத்தியோகத்திலிருந்து அண்மையிலேயே இளைப்பாறினாராயினும் அவரதுவாழ்க்கை தாழ்மையும் படாடோபமற்றதுமாயிருந்தது. அவர் சமயப்பற்றுள்ளவராயிருந்தமையாற் புகழை விரும்பினாரல்லர். ஒரு பெரிய சைவக் கலைஞனுதலால் தமது சமய பக்தியிலும் படிப்பிலும் பெரிதும் ஈடுபட்டிருந்த அவர் ஒரு துறவிபோலவே வாழ்ந்து துறவியாகவே இறந்தார். அவரையறிந்து அவருடன் நன்கு பழகியவர்கள் அவரது களங்கமற்ற நடத்தையையும் நேர்மையையுங் கண்டு மெச்சி அவரது முன்மாதிரியைப் பின்பற்றிப் பலனடைந்தவராவர். தாம்சொல்வதையே தமது செய்கையிலுங் கைக்கொண்டு நடப்பது அவரது தனித்தன்மையாகும். இந்து பரிபாலன விசாரணைக் குழுமுன் அவரளித்த சான்று அவரது அறிவாற்றல்களை அனைவருக்கும் புலப்படுத்தும். அவரது சான்றை விசாரணைக் குழுவினர் தமது அறிக்கையில் ஓர் அநுபந்தமாகச் சேர்த்து வெளியிட்டு அவரைக் கௌரவித்தனர். 'எளிமை வாழ்வும் உயரிய நோக்கும்' என்பதே அவரது சித்தாந்தமாகும். அவரது ஆன்மா அருட் சாந்தி அடைவதாக.

# அழைப்பு

— புதுவை சுப்பிரமணியன் —

மாளிகையில் நாளெல்லாம் சிறைப்பட் டோராய்
மணியணிகள் சுமைமாடாய் மாத ராரின்
கேளிக்கை ஆட்டத்திற் காலம் போக்கிக்
கேடுற்ற வாழ்வதனை மேற்கொண் டோரே !
தோள்சோர உழைத்தில்லம் சேர்வீர் ; ஆங்கு
துணைநல்லாள் அமுதூட்டித் துஞ்சு முன்னர்
தாளினைத்தன் தளிர்க்கையால் வருடுங் காலை
தழைத்திடுமோர் இன்பத்தைக் காண வாரீர் !

உழைக்காமல் பசியாமல் தின்று நாளும்
உடல்வருத்தம் பிணிகளிலே செத்துச் செத்துப்
பிழைக்கின்ற பணக்காரக் கூட்டத்தோரே !
பிணியகல மெய்வருந்தி உழைத்து வாழ
அழைக்கின்றோம் ; அங்கங்கள் சோர்ந்து வீழ
அடிவயிற்றைப் பசிகிள்ள அமுதுண் ணுங்கால்
தழைத்திடுமாம் அறுசுவையின் மேலாம் இன்பம்
தனையுணர விரைந்தோடி வாரீர் வாரீர்.

மானத்தின் பணம்உயர்ந்த தென்று வாழ்வீர் !
மாசுநிறை மனங்கொண்டு பணத்தைச் சேர்ப்பீர் !
ஈனப்பொய் வஞ்சம்சூ தெல்லாம் செய்வீர் !
இத்தனையும் இன்பத்தை நாடுதற்கே !
கானல்பின் ஓடுகின்ற மானு காதீர்
கானுற்றுல் நிலம்வாழக் கண்ட துண்டோ ?
ஊனமற்ற உழைப்பினிலே உண்டாம் இன்ப
ஊற்றதனை உணருதற்கு வாரீர் ! வாரீர் !

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!
இலங்கைச் சரித்திரமும் உலக சரித்திரமும்
இரண்டாம் பாகம்
உலக சரித்திரம்
விலை ரூபாய் 3/-
திரு. எஸ். எவ். டி சில்வா அவர்கள்
சிரேஷ்ட பாடசாலைத் தராதரப்பத்திர (S. S. C.) வகுப்புக்கென எழுதிய ஆங்கில நூலின் தமிழாக்கம்.
முதலாம் பாகம்
இலங்கைச் சரித்திரம்
ஏற்கெனவே வெளிவந்துவிட்டது
விலை ரூபாய் 3/-
ஸ்ரீலங்கா பப்ளிஷிங் கொம்பனி
[4601—v] 111, டாம் வீதி, கொழும்பு.

விலை அறிவிப்பு
வூட்வார்ட்ஸ்
'கிறைப் வாட்டர்'
வூட்வார்ட்ஸ் கிறைப் வாட்டரின் உண்மையான சில்லறை விற்பனவு விலை
ரூபா 2 ஒரு போத்தல்
[எங்கு உள்ளூர் வரி செல்லுபடியோ அது உள்பட]
கூடுதலாகக் கொடுக்கவேண்டாம்
வூட்வார்ட்ஸ் கிறைப் வாட்டரை நீர் வாங்கும்போது

ஒவ்வொருபோத்தலிலும் இவ்வடையாளத்தைப் பார்த்து வாங்கவும்
போலிகளில் எச்சரிக்கையாயிருங்கள்!
WW I-III W. WOODWARD, LTD., LONDON, ENGL

1930

ஈழகேசரி

சுன்னுகம், நந்த. வை. கஉ
— காந்தி ஆண்டு 83 —
பேசுர் தந்தி இல. 805

## இன்னுமா இன வெறி?

பொதுத் தேர்தலில் வாக்களிப்புத் தினம் தலை வாசலில்வந்துவிட்டது. வாக்காளராயுள்ள பொதுமக்கள் நன்கு சிந்தித்துத் தாம் அரிது பெற்ற வாக்குரிமையை யாவர்க்குக் கொடுக்க வேண்டுமென்பதை இனி முடிவு செய்தே யாகவேண்டும். மிக்க தொன்மையும் பெருமையும் வாய்ந்த நமது சொந்த நாடாகிய இலங்கையின் எதிர்காலம் நாம் தெரிந்தனுப்பும் பிரதிநிதிகளிலேயே முற்றும் பொறுத்துள்ளது. இந்த அரிய சந்தர்ப்பத்திற் சுயநலத்தை இலக்காகக்கொண்டு நாம பிழையாக நடந்து கொள்ளின பிற்காலத்தில் அளவற்ற தீமைகளும் அலங்கோலங்களும் வந்தேதீரும். ஆகவே தேர்தலுக்கு முன் வந்துள்ள அபேட்சகர்களுடைய கொள்கைகளை நன்ருகச் சீர்தூக்கி ஆராய்ந்து அக் கொளகைகள் நமது நாட்டின் விருத்திக்கும் நிரந்தர நன்மைக்கும சாதகமாக உள்ளனவா என்று அறிந்த பினனரே அவர்கட்கு வாக்களித்தல் வேண்டும். இன வெறிக்கு இடங்கொடுப்போமாயின் நம நாட்டின் நிலை அதோகதியாகத்தான் முடியும்.

இப்போது தேர்தலைக் காரணமாகக கொணடு எத்தனையோ புதிய கட்சிகள புதுப புதுப பெயர்களைத் தாங்கிக்கொண்டு இளம்பியுள்ளன. ஆனால் உண்மையை நன்கு ஊன்றி நோக்கியாராய்ந்து பார்ததால் இப்பொதுத் தேர்தலில இரு பெரிய கொள்கைகட்கிடையிற்ருன் பெரும் போட்டி ஏறபட்டிருப்பதாக அறியலாம. ஒன்று பொதுமக்கள் எண்ணப்படி நடத்தப்படும் சனநாயக அரசியல் முறை. மறறையது சர்வாதிகாரத்தை மேறகொண்டு அளவிலலாத் தீமைகளையும கலகத்தையும விளைக்கும் கொமயூனிஸட் அரசியல் முறை. இவவிரு கொளகைகளில எதை விரும்புகினறீர்கள் என்பதை இத் தோதல் முடிவு செய்யுமெனறே கூற வேணடும. வட இலஙகை மககளுக்குத் தனியரசு பெற்றுக கொடுககக கஙகணங கட்டி நிறகும சமஷ்டிக கட்சிக்கு இனறு முழு ஆதரவளிப்பவாகள இடது சாரிக கட்சியினரே. இவர்கள எதறகாக இபபடிச செய்கினறனா எனபதை நாம நனருகச சிந்திககவேண்டும. தமிழரசில இவர்கள் கொணட ஆாவமா? இல்லை, தேசீய உணாச்சியை அடித்து முறித்துவிடின தமிழரசுக கட்சியையும வெட்டிப புதைததுவிடலாம் என்பது இடது சாரிகளின அநதரஙக நோககமாகும.

ஆகையால், தமிழ்ப் பெருமக்கள் ஒருமுறைககுமுறை சிந்தித்தே தமது அரிய வாக்கினைத் தேர்தலில் அளிக்கவேண்டும். இன வெறியூட்டும் கட்சிக்கு வழங்கும் வாக்குகள் யாவும் இடதுசாரிக் கட்சியினர்க்கு அளிக்கும் வாக்குகளாகவே முடியும்.. மானத் தமிழினம் என்று சொல்லிக்கொண்டு இடதுசாரிக் கொள்கைகளை நாம் ஆதரிப்பதாயின் நமது நாட்டின் கதி யாதாக முடியும்? தமிழ் மக்களே! இந்த ஆபத்தான நிலையை யோசித்துப் பாருங்கள்! ஐக்கிய தேசியக் கட்சியைத் தூற்றித்திரியும் தமிழரசுக்கட்சி, யாரைக் கட்டித் தழுவித் துணைக்கொள்கின்ற தென்பதை நோக்குங்கள். தமிழ் மக்களைக் கொம்யூனிஸ்டுகளின் வலையில் அகப்படுத்த எடுத்த சூழ்ச்சியன்றி இது வேறு யாது? என்றும் கைகூடப்போகாத ஒவ்வாத அரசியற் பிரச்சினைகளை மேற்கொண்ட தமிழரசுக்கட்சி தனது ஆட்டங்கள் பலிக்காதென அறிந்தும் இடதுசாரிகளின் வாலைப் பிடித்துத் திரிவது எதற்காக என்று கேட்கின்ருேம். இப்போது தமிழரசு என்ற முகமூடியைப் போட்டுக்கொண்டு இடதுசாரிகளிற் பலர் மக்களை ஏமாற்றித் திரிகின்றனர். இதற்குப் பொதுமக்களாகிய தமிழர் இடங் கொடுப்பாராயின்தற்கொலை செய்துகொள்வதாகவே முடியும்?

இந்தியாவிற் கொம்யூனிஸ்ட் கட்சியினரை அரசினர் முற்ருக எதிர்த்துக் கண்டித்துத் தொலைத்து வருகின்றனர். சென்னைப் பிரதமர் இராஜாஜி தாம்கொம்யூனிஸ்டுகளின் பரம விரோதியெனக் கூறிவிட்டார். விஷயங்களைச் சனநாயக முறையில் முடிவு செய்யாமற் புரட்சிகளால் இரத்தப்பெருக்கால் முடிவு செய்யப் பார்க்கும் இடதுசாரிக் கட்சிக்கு இடங் கொடுக்க முடியாதென அவர்கள் தெரிவித்துள்ளார்கள். இத்தகைய தீமைகளை விளைக்கும பாழான கட்சியுடன் சேர்ந்துழைக்கும் தமிழரசுக் கட்சிக்கு ஆதரவளிப்போர் தமக்கும் தமது நாட்டிற்கும் பேரிடையூறு செய்தவராவர். சென்ற நாலரை வருடங்களாகத் தமிழரசுக் கடசியினர் செய்து முடித்தது யாது? இனிமேல் விசேஷமாக ஏதாவது செய்து முடிப்பாரா? இவர்கள் அவசியமின்றிப் பொது மக்களை ஏமாற்றிப் புரட்சிக்காரரின் வலையிற் சிக்க உதவி புரிகின்றனர். பெரும்பான்மை மக்களாகும் சிஙகளருடன் தமிழராகும் நாம் சுயமரியாதையுடன் ஒத்துழைப்பதே உத்தம வழியாகும். 'தமிழரசு' 'தமிழரசு' என்று ஆர்ப்பரித்து மக்களை ஏமாற்றுவது சுலபம். தமிழ் மக்கள் போலித் தலைவர்களை, சுயநலப் புலிகளை, பட்டம்பதவி வேட்டைக்காரரை நம்பிச் சென்ற இருபதுவருடங்களாககாடு வழியே திரிந்து உழன்று அலைந்தனர். இனியாவது உணமையை உணர்ந்து நனமையைப் பயக்கும் வழியில் இறங்கக்கூடாதா? ஆகையால் தமிழ்ப் பொதுமக்கள் இந்த அரிய சந்தர்ப்பத்தைத் தவற விடாது பெரும்பானமை மக்களுடன ஒத்துழைக்க முற்படவேண்டும். இன வெறிக்குச் சாட்டை கொடுத்துத் தமிழினத்தின் பெருமையைக் காப்பாற்ற வேண்டும். அப்படிக் காப்பாற்றுவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

## [illegible] சந்தில் பட்டைதாரி

**பண்டாரவளையின்பழைய** பிரதிநியான திரு. கே. வி. நடராஜாவைத் தமிழ்மக்கள் நன்கு அறிவார்கள். யாழ்ப்பாணம் — வயாவிளானைச் சேர்ந்த இத் தேசபக்தன் என்றும் இலங்கை மக்களின் வளர்ச்சிக்காகவே உழைத்து வருகின்ருர். இப்போது நடைபெறும் பொதுத்தேர்தலில் இலங்கைத் தமிழ் மக்கள் "சமஷ்டி அரசியற் கட்சியை முற்ருகப் புறக்கணித்து, இலங்கையில் தமிழர்க்குத் தொன்மைதொட்டு இருந்துவந்த அரிய பெயரையும் மதிப்பையும் நிலைநாட்டு"மாறு தமிழ் மக்களை அவர் வேண்டுகின்ருர்.

திரு. நடராஜா அவர்கள் காங்கேசன்துறைத் தொகுதிக்குத் திரு. நடேசன் அவர்களை ஆதரித்து அவர்களுக்கு எழுதிய கடிதம் அச்சிடப் பெற்று வெளியாகியுள்ளது. அதிற் சில பகுதிகள் வருமாறு:

❖

### ஞானசூனியம்

"சமீபத்திற் குலைக்கப்பட்ட பாராளுமன்றத்திற் பண்டாரவளைப் பிரதிநிதியாக இருந்துள்ளேன். அத் தேர்தற் தொகுதியிலுள்ள வாக்காளர் தொகை 15,000. இவர்களுள் நூற்றுக்கு எழுபத்தைந்து வீதமானவர்கள் சிங்களர்கள். மிகுதி 25 வீதம் மற்றைய சிறுபான்மைக் குழுவினைச் சேர்ந்தவர்கள். விஷய மிவ்வாருகத் திரு. செல்வநாயகம் அவர்களும், அவரின் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர்களும் பகிரங்க மேடைகளிலும், தமது 'சுதந்திரன்' பத்திரிகையிலும், நான் இந்திய வாக்காளரின் முழு உதவியாற்ருன் தேர்தலில் வெற்றியடைந்தேன் என்று கூறுவது அவர்களின் கணித அறிவின் சூன்யத்தை காட்டுகின்றது. இவ்வாறு இவர் பொய்ப்பிரசாரஞ் செய்வது, என்னையும் நான் வெற்றி பெறுதற்கு ஆயிரக் கணக்கான வாக்குகளை உதவிய சிங்கள நண்பர்களையும் நிந்தை செய்வதாகவே முடியும். மேலும் 1947-ம் வருடத்திற் பாராளுமன்றத் தேர்தல் நடக்கும்போது ஐம்பதுக்கு—ஐம்பதுப் பிரச்சினை உச்சப் படியை அடைந்திருந்தது மாகும். வகுப்புத் துவேஷம் மிக்க வன்மையும் பெற்றிருந்தது. பண்டாரவளைத் தேர்தற் காலத்து முழு வாக்காளருள் ஆக நூற்றுக்கு 55 வீதத்தினரே வாக்குரிமை யளித்தனர். என் சார்பாக வாக்குகளை அளித்த 5200 பேர்களில், 3500 பேர்கள் சிங்களராவர்.

❖

### தற்கொலை

"தமிழன் என்ற முறையில் நன்ருக நான் சீர்தூக்கி ஆராய்ந்து பார்க்குமிடத்துத் திரு. செல்வநாயகமவர்கள் எடுத்துரைக்கும் சமஷ்டிப் பிரச்சினை (தமிழ் அரசு) வட, கீழ் மாகாணங்களில் வசிப்போருக்குப் பெரிய நாசத்தை விளைவிப்பதுமன்றித் தற்கொலை செய்விப்பதுமாகின்றது.................. திரு. செல்வநாயகம் அவர்கள் அதிகார வேட்கை கொண்டு பயங்கரமான தீங்கொன்றைத் தமிழர்க்கு இழைக்கின்றனர். வட இலங்கையில் வசிக்கும் சுயாதீன புத்தியுடைய எனது தமிழ் நண்பர்கள் திரு. செல்வநாயகம் அவர்களின் பிழையான கொள்கையால் வரவிருக்கும் தீமைகளை உண்மையாக உணர்ந்து அரசியல் விஷயத்தில் அவர் பங்குபற்ருது ஓட்டித் துரத்த வேண்டும்.

❖

### முதலைக் கண்ணீர்

"திரு. செல்வநாயகம் அவர்களும் அவரது வீரத் தமிழர்களும் இந்தியத் தமிழர்கட்காக முதலைக் கண்ணீர் வடிப்பதை நோக்கப் பெரிய பரிதாபமாகின்றது. அவருடைய சமஷ்டித் திட்டப்படி இந்தியர் வசிக்கும் கண்டிப் பகுதிகளிலும் சுயாட்சி அரசாங்கங்களை ஏற்படுத்தினன்றி இந்தியரின் சிக்கல்கள் நீங்கப் போவதில்லை. இந்தியரின் பிரஜாவுரிமை விஷயம் இலங்கை யரசினராலேயே முற்ருக்கப்பட வேண்டும். இலங்கையைத் தமதுசொந்த நாடாக உண்மைப்படி அபேட்சிக்கும் இந்தியர்கள் யாவரும் இலங்கையிற் பிரஜா வுரிமையைப் பெறவேண்டும். இந்தியரின் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்கும் விஷயத்தில் நான் இதுவரையும் போராடி வந்தேன். இனி மேலும் அப்படிச் செய்வேன் ............மிக்க தாராள சிந்தையுடைய தலைவராகும் திரு. டட்லி சேனநாயகா அவர்கள் தேர்தல் அமளி முடிந்தவுடன், இந்தியரின் பிரஜாவுரிமை விஷயத்தை யாவர்க்கும் ஏற்ற முறையில் ஒழுங்கு செய்வாரென நான் திடமாக நம்புகின்றேன். ஆனல் திரு. செல்வநாயகம் போன்றவர்கள், செய்துமுடிக்கவியலாத நிபந்தனைகளை அச்சமயம் புகுத்தாதிருக்க வேண்டும்."

❖

### ஆச்சரியமாகாது

நமது அரசியல் நிருபரின் கருத்தின்படி திருகோணமலையில் தமிழரசு தலை நிமிர்த்துமென்பது சந்தேகம். இந்த அழகில் தமிழரசு அபேட்சகர்கள் அத்தனை பேரும் வாக்காளர்களால் ஒதுக்கப் படுவார்களாகில் அதில் ஆச்சரியமிருக்கப் போவதில்லை.

## தேர்தற் கோட்டை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னுமினிய தாய் மொழியைக் காப்பாற்றித் தமிழரசின்கீழ் வாழத் தீர்மானித்து விட்டார்கள். தாம் எதை எழுதுகின்ருேம், பேசுகின்ருேம் என்பதை உணராத வி. க. கனகரத்தினம் போன்ருேரின் குதர்க்க வார்த்தைகளைக் கவனிக்க மாட்டார்கள்."

அதுசரி; தமிழரசுக் கட்சியினருடன் கொம்யூனிஸ்டுகளும சம சமாஜிகளும சேர்ந்து மாரடிக்கின்றனர். தமிழரசு அல்லது கொம்யூனிஸம் வந்தால் இந்த இடதுசாரிகள் எதை விரும்புவார்கள் என யூ. என். பி. பண்டக்காய் ஒன்று கேட்கின்றது.

● தமிழரசுக் கட்சியினர் இலங்கை இந்தியர்களுக்கு வாக்குரிமை வழங்க வேணடுமெனபதை ஆதரித்து அரசாங்கத்துக்கு எதிராக நெருப்பெடுத்து வருவது உண்மை. வட்டுக்கோட்டையில் 2-5-52-ல் வெளியாண ஒரு பிரசுரத்தில் வடக்கனைப் பறறித் தமிழரசு வக்கணை பேசுவதை இதோ படியுங்கள்: "......தன்மானம் பெரிதா? சத்தியம் பெரிதா? வடக்கனையும் வயிற்றுவலியையும் நம்பாதே என்பது ஓர் உண்மைப் பழமொழி. 'நம்பிக்கைத் துரோகம்' என இடித்துரைத்துக்கொண்டு தமிழரசுக் கொள்கையின் மர்மங்களை ஒரு பிரசுரம் வடித்துத் தந்துள்ளது. அதில் திரு. செல்வநாயகம் இலங்கை இந்தியருக்கு அடிவருடிக்கொண்டு திரு. நடேசபிள்ளையின் காலை வாரிவிடும் சுயநலப்போக்கைப்பாருங்கள்:

● "......இருபத்தைந்து வருடமாக இலங்கையையே தாயகமாகக் கொண்டிருக்கும் இந்தியர்களின் பிரஜா உரிமையைப் பறிப்பது எத்தகைய அநீதி என்று நீதிபேசும் திரு. செல்வநாயகம், திரு. சு. நடேசபிள்ளையை எதிர்த்து ஊர்ப்பிறந்த இலங்கையன் நான் இருக்கக் கடல்கடந்து வந்த இந்தியனுக்கா உங்கள் வாக்குகளைக் கொடுக்கப்போகின்றீர்கள் எனக் கூறித்திரிவது என்ன நீதி? மறைந்திடக்கும் தமிழரசுக் கொள்கையின் மர்மம் இதுதானு?"

● மற்ருெருமர்மம், திரு. செல்வநாயகம் மலாயாவிற் பிறந்து வளர்ந்தவராகத் தாமிருந்து கொண்டு; இலங்கையன் நான் இருக்கக் கடல் கடந்து வந்த இந்தியனுக்கா உங்கள் வாக்கு........? என்று பறை சாற்றும் விந்தையென ஏழாலை அன்பர் ஒருவர் எழுதியுள்ளார்.

● இதிலும் மர்மமானது தஞ்சாவூரிற் பிறந்து நீண்டநாள் கொழும்பில் வாசம் செய்யும் திருவாளர் த. செ. பூரணலிங்கம்பிள்ளை அவர்களின் தந்திரோதம்! திரு. நடேசனைத் தமது சகோதரனுக ஏற்றுத் தடுதத்தம் போடும் இந்தப் பேர்வழி நடேசனுக்கு விளைத்துள்ள சதிச் செயலானது தமிழ் இலக்கிய பரம்பரையைச் சேர்ந்தது. அன்று சில கவிவாணர்கள் கம்பனின் முகத்திற் கரிபூச விரும்பி நாவிதன் ஒருவனைக் கம்பனின் சகோதரன என்று சொல்லும்படி ஏவி விட்டார்கள். அந்த ஏவற் பேய் போன்ற ஒன்றுதான் இன்று கொழும்பிற் பூரணத்துவம் வாய்ந்த லிங்க உருவத்திற் காற்ருேடு கலகலக்கின்றது.

● வண்ணார்பண்ணை உணமை வெளியீட்டில் முதலாவது தேர்தலிலே ஏகமுகமாகச் சென்ற யாழ்ப்பாணப் பிரதிநிதிகள் செய்ததென்ன என்ற பகுதியிற் பின்வருவனவுங் காணப்படுகின்றன:

1. "மந்திரிப் பதவிக்காகச் சொன்னதைக் காற்றில் விட்டுப் பதவிப் பித்தில் உலாவினுர்கள் ஜி. ஜி. அவர்கள்."

2. "காங்கிரசை விட்டுவிலகியதும், அடுத்த தேர்தலுக்கு உதவியாகத் 'தமிழரசு' எனனும் பெயர் பூண்ட ஒரு பிதற்றற் கட்சியை ஏற்படுத்தி அக் கட்சிப் பிரசாரத்திலேயே

# அமெரிக்கா - தமிழரசு சரசம்!

## தமிழினத்தை அடைவு வைப்பதா?

## தலைவர்கள் சூழ்ச்சி அம்பலம்

சமீபத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மானிப்பாயிலே நடைபெற்ற ஒரு கூட்டத்தில் தமிழரசுக்கட்சி அபேட்சகர்களில் ஒருவரான திரு. ஸி. வன்னியசிங்கம் தமிழரின் எதிர்கால வாழ்வைப் பெரிதும் பாதிக்கக்கூடிய ஒரு விஷயத்தை அவிழ்த்து விட்டிருக்கின்றார் என அறியக்கிடக்கின்றது.

கொழும்பிலுள்ள 'அமெரிக்கன் எம்பஸி' என்ற அமெரிக்க ஸ்தானிகர் காரியாலயத்தினர் தமிழரசுக் கட்சியினரை ஒரு விருந்து வைபவத்துக்கு அழைத்தனரென்றும் தமிழரின் எதிர்காலத்தைப் பற்றித் தமிழரசுக் கட்சியினருடன் அமெரிக்கர் சம்பாஷித்தனர் எனவும் திரு. ஸி. வன்னியசிங்கம் மானிப்பாய்க் கூட்டத்திற் கூறினர் எனத் தெரிகின்றது. தமிழர் பிரிந்து வாழ்வதாயின் அவர்களின் உதவிக்கு அமெரிக்கா முன்வருமென அவர்கள் கூறினர்களாம்.

இதுவிஷயத்தை அமெரிக்க கலாச்சாரத்திற் பரிச்சயம் வாய்ந்த திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள் தமிழரசுக் கட்சியினரால் நடாத்தப்படும் பத்திரிகைக் காரியாலயத்திற் சென்று தெரிவித்தபோது அப்பத்திரிகையை நடாத்துபவர்கள் தமிழ் மக்கள் தங்கள் எதிர்கால வாழ்வை அமெரிக்கரிடம் தாரைவார்த்துக் கொடுப்பது அபாயகரமானதெனத் தெரிவித்து, நெருப்பெடுத்தார்களெனப் பேசப்படுகின்றது?

அதற்குத் திரு. செல்வநாயகம் பின்வரும் சமாதானத்தைக் குளிர்மையாகக் கூறினாராம்: "அமெரிக்கா விரைவில் உலக வல்லரசாக விளங்கப் போகின்றது. ஆனபடியால் அவர்களின் உதவியைத் தமிழர் இப்போதே நாடினுல் அப்படி யென்ன குடிமூழ்கிப் போய்விடும்?"

இந்த அழகில் கொழும்பிலிருந்து கொம்யூனிஸ்டுகளின் ஆதரவுடன் வெளியாகும் 'பீப்பிள்ஸ் வோய்ஸ்' என்ற ஆங்கில வார வெளியீடு 16-5-52 இதழில் எழுதியிருப்பதைக் கவனித்தல் நன்று. **இவர்களுக்கு உங்கள் வாக்குகளை அளியுங்கள்** என்ற தலைப்பில் அதன் ஆசிரியர் எழுதுவதாவது: "இந்த அபேட்சகர்கள் இலங்கைக்கு உண்மையான சுதந்திரம் வேண்டுமென அதிகாரத்துடன் ஏகோபித்துக் கேட்கின்றனர்....... எமது நாட்டைச் சுரண்டும் பிரிட்டனினதும் அமெரிக்காவினதும் முந்தானைகளிற் கட்டுண்டு நாம் வாழ மாட்டோம்."

இவ்வாறு வீரசுதந்திரம் பேசும் அப்பத்திரிகையானது வாக்காளர்களைத் தமிழரசுக் கட்சியை ஆதரிக்குமாறு கேட்கும்போது அக் கட்சியின் தலைவர் அமெரிக்காவுக்குஇலங்கைத்தமிழரை அடைவு வைக்க நினைத்ததாகச் சொல்லப்படும் சூழ்ச்சியை அவர் அறியவில்லைப் போலும்**சோழியன்குடுமி சும்மா ஆடுமா?** மானததமிழினமே இத்தகைய தலைவர்களைப் பற்றிநீஎன்ன நினைக்கின்றாய்?

காலங்கழித்தார் "பாவி" யாய செல்வநாயகமவர்கள்."

பாவியார் போமிடம் பள்ளமுந் திட்டியுமென்பது அறிந்ததுதானே!

● வட பகுதிகளிலுள்ள சில தொகுதிகளிற் போட்டியிடும் சமசமாஜி அபேட்சகர்கள் தொழிலாளர், விவசாயிகள் அரசாங்கத்தை அமைப்பதெனக் கங்கணங்கட்டி நிற்கின்றனர். நாட்டில் உண்மையான ஜனநாயகத்தை நாட்டுவோம் என அவர்கள் முரசு கொட்டுகின்றனர். தோழர்கள் வெளியிட்டுள்ள பிரசுரமொன்று கூறுவதாவது "பெரும்பான்மையான மக்களை ஒரு சிறு கூட்டம் சுரண்டி வாழும் சமுதாய அமைப்பை முற்றிலும் மாற்றி, இந் நாட்டில் வாழும் எல்லா மக்களுக்கும் நல்வாழ்வு நல்கும் ஒரு சமுதாயத்தை நிர்மாணிப்பதற்குப் பொதுமக்கள் எல்லோரும் ஒற்றுமையாகத் திரண்டு கடமையாற்றவேண்டிய காலம் வந்துவிட்டது....."

● பருத்தித்துறையிற் போட்டியிடும் தோழர் குமாரசுவாமி பாலசிங்கம் ஒரு வெடியில் இரு குருவிகளை வீழ்த்தப்பார்க்கின்றார். இந்த அழகில் ஏனைய அரசியற் கட்சிகள் இவரது கட்சியிடம் பிச்சை கேட்கவேண்டும். சுதந்திரமும் தனியரசும் இதிற் பின்னப்பட்டிருக்கின்றது. "இலங்கை உண்மையான சுதந்திரம் பெறவேண்டுமானால், தமிழருக்குத் தனிராச்சியம் வேண்டுமானல், தமிழ் சிங்களத்தோடு சரிசமானமாகத் தலைநிமிர்ந்து நிற்கவேண்டுமானல் இலங்கை சமசமாஜிக் கட்சி அபேட்சகரையே தெரிவு செய்யுங்கள்" எனத் தோழர் பாலசிங்கம் கர்ஜிக்கின்றார். கோப்பாய்த் தொகுதி அபேட்சகர் தோழர் தர்மரத்தினம் அவர்களும் இதே பல்லவியைத்தான் பாடுகின்றார்.

● தமிழரசென்றால் பயந்து நடுங்கவேண்டிய நிலைமை நாட்டில் ஏற்பட்டுவிட்டது. 'தமிழரசா — தமிழினத்தின் தற்கொலையா? தமிழரசுக் கோரிக்கை எமலோகச் சீட்டு' என்று இப்படியெல்லாம் பயமுறுத்தும் பிரசுரங்கள் யாழ்ப்பாணத்துத் தமிழ்ப் பெரியார்களாலும் கொழும்பிலுள்ள யாழ்ப்பாண வாசிகளாலும் எழுதி வெளியிடப்படுகின்றன. அவற்றுள் ஒன்று எடுத்துரைப்பதாவது. "சோல்பரிக் கமிஷன் இலங்கையில் விசாரணை நடத்திய சமயத்தில் தமிழ்க் காங்கிரஸ் சமர்ப்பித்த திட்டத்தை இப் பொழுது தமிழரசு கோரும் தலைவர்களும் சேர்ந்து தானே தலைபாட்டினார்கள். அந்தத்திட்டத்தை ஆங்கில அரசாங்கம் ஏற்க மறுத்தால் தமிழரசு தா என்று இவர்கள் ஏன் அப்பொழுது வற்புறுத்தவில்லை......."

கொழும்பிலுள்ள யாழ்ப்பாண வாசிகள் வேண்டுவதாவது: புத்தியுள்ள தமிழரே எத்தனையும்செய்து இத்தகைய தமிழரசு வாதிகளைப்பகிஷ்கரியுங்கள்.

(தொடர்ச்சி 4-ம் பக்தி பார்க்க)

---

## உங்கள்

# வாக்கு

# ?

வாக்காளர்களே!

உங்கள் ஒவ்வொருவரினதும் நேர்மையான வாக்கில் இலங்கை யரசியலின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது என்பதைச் சிந்தியுங்கள்.

நான்குவருடத்துக்கு முன் தமிழ்க் காங்கிரஸிலிருந்து கிளம்பிய ஒரு பேய்க்காற்றிற் சிக்கிய பெரும்பாலான மக்கள் அதன் பலாபலன்களைச் சென்ற சில ஆண்டுகளாக அனுபவித்து வருகின்றனர். இவர்கள் ஏவிய வகுப்புவாதப் பேய் பெரும்பாலான சிங்கள மக்களிடையேயும் பின்னர் புகுந்துகொண்டது. அதனுல் தமிழர்— சிறப்பாக யாழ்ப்பாணத்தவர்—அடைந்த இன்னல்கள் அளப்பில. அக்காலத்திலே வகுப்புவாதப் பேய்க்கு உணவூட்டி, வகுப்புவாதிகளைப் பாராளுமன்றத்துக்கு அனுப்பிவைக்கப் பெரும் தொண்டு புரிந்த சில அரசாங்க உத்தியோகத்தர்கள் — ஏவிவிட்டபேய் திரும்பித் தம்மேல் தாவியதன் பலனுக— தம் கந்தோர்களிற் படும் பாட்டைச் சென்ற சில வருடக்கணக்காக அனுபவித்தும், இவர்களுட் பெரும்பாலானோர் இன்னும் புத்திவரப் பெற்றரில்லை. இவர் 'தாம் செய்த வினையைத் தாமே அனுபவிக்கின்றனர்.' இதன் பயனுகத்தான் தென்னிலங்கையில் வியாபாரத் துறையிலீடுபட்டு யாழ்ப்பாணத்தின் சீருக்கும் சிறப்புக்கும் உறுதுணையாயுள்ள தனவந்தர்களுக்குச் சொல்ல முடியாத இடுக்கண் நேர்கின்றது. இவற்றை வாக்காள மக்கள் நன்கு சிந்திக்கவேண்டும்.

ஆனுல் புத்திவரப்பெற்ற வகுப்புவாதத் தலைவர்களுள் பெரும் புள்ளிகள் தம பிழையை உணர்ந்து வழிக்கு வந்தனர். இதனுற சிறு நன்மை ஏற்பட்டதுமுண்டு. இருந்தும் 'நான் விட்டாலும் கரடி என்னை விடவில்லை' என்ற பிரகாரம் வகுப்புவாதக் கனல் ஒரு சில அரசாங்க உத்தியோகத்தரிடம் ஒளிவிட்டுப் பிரகாசிக்கத் தொடங்கிவிட்டது; 'தாங்கள்தான் அரசாங்கம்' என்ற மமதையால் இக் கனலுக்கு நெய்யூற்றி வளர்க்கின்றார்கள். எப்படி வகுப்புவாதத் தலைவர்கள் தம் காரியம் கைக்கெட்டியதும் தம் பிழையை உணர்ந்துகொண்டார்களோ! அப்படியே ஒரு சில 'காற்சட்டைத் துரை'மார்களும், மண்வெட்டி தானுங் கையிற் பிடிக்கமுடியாத நிலையில், வீட்டிலிருந்து கொட்டாவி விடும்போது உணர்வார்கள் என்பது திண்ணம். இப்போது இவர்கள் இனவெறி என்ற பேய்ச் சூருவளியிலகப்பட்டுத் தலைகால் தெரியாமல் தடுமாறுகின்றனர். பேய்க்காற்றுப் பேய்ச் சூருவளியாயானதும் அதனுலநேரவிருக்கும் கேடுகளை வாக்காள மக்களே நன்கு சிந்தியுங்கள். பாகிஸ்தான் வேண்டி ஜின்னு பிரிந்து நின்றதனுற் பல்கோடி ஹிந்துக்களுக்கு நேரிட்ட — பார்ப்பதற்கோ, கேட்பதற்கோ, நினைப்பதற்கோ முடியாத—பேரிடி எங்கள் மேலும் வீழாது காப்பாற்றுவது உங்கள ஒவ்வொருவரின் திர்க்கமான வாக்குரிமையிலேயே தங்கியிருக்கின்றது. உங்கள் வாக்குப பரிசுத்தமானது. நம்பிக்கைக்கும் நேர்மைக்கும் பாதகமாக அதனை வழங்காதீர்கள். நம்பிக்கைத் துரோகம் மாபெரும் பாதகம என்பதை உணருங்கள்.

—சாணக்கியன்

---

<u>கொழும்பு நிருபர் கடிதம்</u>

# அரசகருமமொழி எது?

## இதுவரை 2300 சத்தியாக்கிரகிகள்

அரசினர் காரியாலயங்களில் தமிழையும் சிங்களத்தையும் உபயோகித்தற்கு வேண்டிய பூர்வாங்கச் சுற்றுநிருபம் ஒன்று வெளியிடப்பட்டது. அரசாங்க அலுவல்களைத் தாய்மொழியில் நடத்துவதற்குப் போதிய தன்னம்பிக்கையில்லாத உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். மேலும் ஒவ்வொரு காரியாலயத்திலும் இத்துறையில் எவ்வளவுதூரம் அநுபவசாத்தியமான முறைகள் கையாளப்பட்டு வருகின்றன என்பதைத் திறைசேரி அறிய விரும்பியிருப்பதாகவும் அச் சுற்றுநிருபத்திற் குறிக்கப்பட்டுள்ளது. சிங்களம் அடிக்கும் 1000 எழுத்துப்பொறிகருவிகளை வரவழைக்க ஒழுங்குசெய்யப்படுகிறதாம், ஆனுல் தமிழ் பொறிக்கும் யந்திரங்களைப்பற்றி ஒரு அறிவிப்பையும் காணவில்லை. அரசகருமங்களுக்கு ஒரு மொழியிருப்பதுதான் நல்லதென்ற முடிவுக்குப் புதிய பாராளுமன்ற அங்கத்தவர்கள் வரவுங் கூடுந்தானே. யார் அறிவார்? இருமொழிகளிற் கருமம்நடாத்துவதிற் கஷ்டங்களும் உண்டென்பதை மறுக்கவும் முடியாது.

### கள்ளக் குடியேற்றம்

கள்ளத்தனமாக வந்து குடியேறியவர்களென்று அரசினர் கண்காணிப்பிற் கடந்த வருடம் வைக்கப்பட்டவர்கள் தொகை 2347 ஆகும். ஆனுல் பொலீஸ் அதிகாரிகள் கணக்கின்படி இது 3792 ஆகும். இதனுல் தொற்றுநோய் நம் நாட்டில் அதிகம் பரவியுள்ளதென அப்பகுதி அதிபர் டொக்டர் விக்கிரமசிங்க கூறுகிறார். எனவே கள்ளக் குடியேற்றத்தால் இலங்கையிலே அம்மை நோய்போன்ற தொற்றுநோய்கள் பரவிவிட்டன. தொற்றுநோய் பரவுவதைத் தடுக்கும் தேவை இல்லாதிருப்பின் பிற நாடுகளிலிருந்து நம் நாட்டுக்குத் தொற்றுநோய் எவ்வளவு விரைவில் பற்றிப் பிடித்திருக்கும் என்பதை ஒருவாறு யூகித்துக்கொள்ளலாம்.

### சத்தியாக்கிரகம்

சத்தியாக்கிரகத் தொண்டர்களுக்கு மக்களின் ஆதரவு இருந்துவருகின்றது. 20-5-52 வரை 2300 தொண்டர்கள் சத்தியாக்கிரகத்திற் பங்குபற்றியிருப்பதாக இலங்கை இந்தியத் தலைவர் ஒருவர் தெரிவித்தார்.

---

# இலங்கை இந்தியக் காங்கிரஸ்

## பண்டாரநாயகாவை ஆதரிக்கின்றது

யாழ்ப்பாணம் 22-5-52

**இலங்கை இந்தியக் காங்கிரஸ்,** திரு. பண்டாரநாயகாவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஆதரித்து நிற்பதாகத் திரு. தொண்டமான் அவர்கள் ஈழகேசரிக்குத் தெரிவித்தார்கள். நுவரெலியாவில் திரு. பண்டாரநாயகாவின் கட்சியும், யூ. என். பி. யும் சுயேச்சை அபேட்சகர்கள் இருவரும் போட்டியிடுகின்றனர். இவர்களுள் இருவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழர். அப்படியிருந்தும் இலங்கை இந்தியக் காங்கிரஸ் திரு. பண்டாரநாயகாவின் கட்சிக்கே சகல ஆதரவும் அளித்துவருகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியை எதிர்த்து நடைபெறும் சில கூட்டங்களிற் பேசுவதற்காகத் திரு. தொண்டமானும், திரு. இராஜலிங்கம் அவர்களும் சென்ற புதன்கிழமை (21-5-52) மாலை கொழும்பிலிருந்து கார் மூலம் யாழ்ப்பாணம் வந்தடைந்தனர். அன்று மாலை ஏழாலையில் திரு. செல்வநயாகத்தை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்திலும் இவர்கள் இருவரும் பங்குபற்றினர்.

திரு. பண்டாரநாயகா தமது அரசியற் கொள்கைகளை மாற்றிக் கொண்டு வருவதால்தான் இலங்கை இந்தியர் காங்கிரஸ் அவருடைய கட்சியை ஆதரித்து நிற்பதாகத் திரு. தொண்டமான் தெரிவித்தார்.

### சாவகச்சேரி

எவ்விதமான எதிர்ப்பு இருந்தாலும் அவற்றைச் சமாளித்துச் சாவகச்சேரியில்தங்கள் நண்பன் திரு. குமாரசுவாமி (கும்) வெற்றி பெறுவார் என இலங்கை இந்தியக் காங்கிரஸின் பழையதலைவர் திரு. இராஜலிங்கம் கருதுகின்றார்.

---

## தேர்தற் கோட்டை

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இதுவரை தேர்தற் காண்டத்தில் வசனபாகம் பதம்பார்த்தோம். இனிப் பாடற் பகுதியை ச் சுவைப்போம்

● எங்கள் தலைவன் நாகநாதன் இரவிபோல வருகவே என வரவேற்று நக்கீரன் பாடுவதாவது:

"அன்பு பொறுமை வீரமாதி
அரிய பண்பு கொண்டவன்
அசலம் அன்ன உறுதி நெஞ்சம்
ஆழ்ந்த சொல்லும் கண்டவன்,
துன்பம் கோடி மண்டி வரினும்
அயருறாத வீமனும்
தூய நாக நாதன் வெல்க
சோபனங்கள் கூறுவோம்"

நவயுகவீமன் வாழ்க!

மானத் தமிழ் மகன், மறைவேந்தன் பாடுவதாவது:

"தேர்தல் திருநாளும் வந்ததடா
—இங்கு
தீமையும் நன்மையும் வந்ததடா
பூர்வந் தமிழ்செய்த புண்ணியத்தால்
—நன்மை
பொன்னம் பலமாக வந்ததடா"

● 'வள்ளி கணவன் பெயரை' என்ற மெட்டில் ஆசிரியர் சி. இராமலிங்கம் அவர்களின் திரு. நடேசன் அன்புப்பாவில் ஒன்று வருமாறு:

"தஞ்சை நகர்ப் பிறந்த தத்துவ
வித்தகனை
நெஞ்சில் நினைந்திடுவாய்
தமிழா நீ தினம் வாழ்க வென்று
—தமிழா நீ தினம் வாழ்கவென்று"

இப்படியே பாட்டிலும் உரையிலும் தீட்டிய செந்தமிழ்ப் பிரசுரங்கள் எத்தனையோ அற்புதங்களை யெல்லாம் செய்து வருகின்றன.

தேர்தற் கூட்டங்களிலே இந் நாட்களிற் புளி எண்ணெய், அரைப் பெண்ணெய் விஷயங்களும் பேசப் படுகின்றன. 'அணுக்குண்டு தாசன்' இது பற்றி எழுதுவதாவது:

● "ஓர் அறிஞர் ஒரு கட்சியைப் பற்றிப் பேசும்போது அக்கட்சியினர் பொருளாதாரத்துறையில் நெருக்கடி வராதிருப்பதற்காக ஒரு வியாபாரத்தைக் கையாள விருப்பதாகச் சொன்னார். அதில் நல்ல வெற்றியும் காண்பார்களெனவும் கூறினர். அவ்வியாபாரம் தான் புளி எண்ணெய் வடித்து விற்பது எனவும், ஆகவே அக்கட்சிக்கு 'புளி எண்ணெய்க் கட்சி' என்பது சாலவும் பொருத்தும் எனவும் குறிப்பிட்டார்கள்.

# தாய்மை

— 5 —

மனதைக் கல்லாக்கிக்கொண்டு புகைவண்டிக்குள் இருந்தேன். இன்றைய நாகரீகம் மனதைக் கல்லாக்கவும், வாழ்க்கையை நொருக்கிவிடவும், கவலை முற்றையும் அடிமனத்துள் அமுக்கி மறைத்துக்கொண்டு வெளியே முகமலர்ந்து காட்சிகொடுக்கவுந்தானே கற்றுக்கொடுத்துள்ளது. இதைக் கவனமாய்மனத்துட் திணித்து நடந்து வராவிடின் 'தற்காலத்தவர் மதிக்கும் மானம்' காற்றாய்ப் பறக்காதா?

• வீட்டிற்குச் சென்றதும் உடுப்பை மாற்றிக்கொண்டு படுக்கையிற் சாய்ந்தேன்: நாகரீக சம்பிரதாயங்களையும் களைந்தெறிந்துவிட்டு மனதை யிளகவைத்துக்கொண்டேன்.

தேநீருடன் என்னிடம் வந்த அம்மா பதைபதைத்த நெஞ்சுடன் என் நெற்றியிலும் உடம்பிலும் கையை வைத்தார். உடம்பு ஒரே அனலாய்த் தகித்தது. "என்னடா உடம்புக்கு?" எனக் கேட்டார்.

'உடம்புக்கு ஒன்றுமில்லை; உள்ளந்தான் நோவாகிவிட்டது' என்ற உண்மையை எவ்வாறு தாயாரிடம் கூறுவதென நினைத்துப் பொருமிய நான், "வெறுமனே தலையை வலிக்கிறது. இந்தத் தேநீரைப் பருகிவிட்டால் அது மாறி விடும்" எனக் கூறிச் சமாளித்தவண்ணம் தேநீரை வாங்கிப் பருகினேன்.

எனது வார்த்தைகளில் நம்பிக்கை கொண்ட அன்னை திருப்தி யடைந்தவராய், "ஆமாம்; காலை எட்டுமணி தொடக்கம் மாலை ஐந்து மணி வரையும் பள்ளிக்கூடத்திற் புத்தகங்களுடன் ஒரேயடியாய் உட்கார்ந்து கிடந்தாற் தலைவலியும், மண்டைவலியும் ஏற்படாமல் என்ன செய்யும்?" எனக் கல்லூரியின் மீது தனக்குள்ள ஆத்திரத்தை உதிர்த்துவிட்டுச் சென்றார்.

— 6 —

எனது மனமும் அந்த நேரத்திற் கல்லூரியையே சபித்துக்கொண்டிருந்தது. கல்லூரிப் படிப்பின் பிரதிபலன் தானே இந்தக் காதலும், அதன் சுவடு அழியாதிருக்க ஏற்பட்டுள்ள ஏமாற்றம் தடுமாற்றம் யாவும்.

எனது மன வேதனையில் ஒன்றையுமே நிதானித்துச் சிந்திக்குந் திறனில்லாது போய்விட்டது. ஒவ்வொரு வாழ்வின் கோணங்களையும் ஒழுங்கின்றிச் சிந்தித்து அலுத்துக்கொண்டிருந்தது மனம்.

தலைவலி தந்த நிகழ்ச்சியையும், அன்றைய மண் கூசா நிகழ்ச்சியையும் மூடிந்து அவிழ்த்து அந்தக் காட்சிகளிற் கலந்து நிம்மதியாய் வேதனையை யனுபவித்துக்கொள்ளலானேன்.

மறுநாட் காலையில் அம்மாவுக்கு 'எனது உடம்பு சௌக்கியமாய்த்தானிருக்கிறது' என்பதை நிரூபிக்க வேண்டிய அவசியத்தால் கல்லூரிக்குச் செல்ல நேர்ந்தது. வழமைபோல் புகையிரதத்திற் காட்சி தந்த சந்திராவைக்கண்டதும் எனது மனப் பொருமல் அதிகரித்தது. ஆனாலும் அந்தக் களங்கமற்ற முகத்தில் எந்தவிதமான குற்றங் குறைகளையும் சுமத்திவிடும் ஆற்றலை உடனேயே இழந்தேன்.

தூய இருதயத்தைப் பிரதிபலித்துக் காட்டும் கண்ணாடி

க. வ. தியாகராஜன்

யாக இருந்த முகத்தின்மீது தூசி படிய வைப்பதில் யார் தான் விருப்புக்கொள்ள முடியும்!

முதல்நாள் நான் நடந்துகொண்ட மாதிரிக்குக் கோபம் கொண்டிருந்தாளோ, அன்றித் தான் நடந்துகொண்டது தவறென எண்ணி மனது புண்ணாகி யிருந்தாளோ என்பதை நான் அறியவில்லை: என்னுடன் பேசுவதற்குத் தயங்கினாள்.

'கங்காதரன் பிரியாவிடை கூறிப் புறப்படுஞ் சமயத்திற் சந்திராவின் துக்கமான கோலம்' எனது கண்களை மங்கச் செய்தது. அதற்குள் என்ன அர்த்தம் புதைந்து கிடக்கிறது என்ற ஆலோசனையில் மௌனத் திரையைத் தொங்கவிட்டுக்கொண்டேன். வண்டியை விட்டிறங்கிக் கல்லூரியை யடையும்வரை அருகருகே சென்றுங்கூடத் திரை நீண்டுகொண்டேயிருந்தது.

— 7 —

கலாசாலை முற்றும் ஒரே அமர்க்களம். சந்திராவின் துணிகரமான 'கண்டிப்புக் கடிதம்' பற்றி அதிபர் கூட மெச்சி வானளாவப் புகழ்ந்தார். அன்றைய பிரார்த்தனைக் கூட்டத்தில் அவர் ஒரு சிறந்த பிரசங்கமே செய்துவிட்டார். மாணவர்கள் முன்னிலையில் 'காதல்' என்ற சொல்லையே உச்சரிக்க மறுக்கும் அதிபர் அன்று எப்படித்தான் அவ்வளவையும் ஒளிவு மறைவின்றித் தெளிவான குரலிற் கூறி முடித்தார் என ஆச்சரியமுறுகிறேன். அன்றைய புத்திமதியின் முடிவிற் கூறிய செய்திதான் எவ்வளவு வியப்பானது!

சந்திராவின் காதல் பெற்று வாழ விரும்பிய கங்காதரன் சந்திராவிற்குக் கடிதமூலம் தன் மனப்பான்மையை வெளிப்படுத்தியுள்ளான். அதற்குச் சந்திரா எழுதிய கண்டிப்புக் கடிதத்தைக் கங்காதரன் பெறுவதன் முன்னரே அது அதிபரின் கையிற் சிக்கிவிட்டது. அதன் பலனாய் நடைபெற்ற விசாரணையின் பேறாகக் கங்காதரன் கல்லூரியை விட்டு நீங்கவேண்டியதாயிற்று.

"காதலிலும் யுத்தத்திலும் வெற்றி பெறுவதற்கு எதையும் கைக்கொள்ளலாம்' என்பது ஆங்கிலேயரின் சித்தாந்தம். ஆங்கிலம் பயிலும் பலர் இதனை இலட்சியமாக்கிக்கொண்டுள்ளார்.

மேல்நாட்டு மொழியைக் கற்கும் நோக்கத்தில் நாம் அவர்களது பண்பாட்டைப் பயின்று கொள்வது நமது இழ்நாட்டு வாழ்வைச் சிதைத்துவிடுவதாக முடியும்.

இந்தநோத்தில் நம்நாட்டுப் பண்பாட்டை நிலைநிறுத்த ஒரு மாணவி முன்வந்தாளே என்பதை நினைந்து பெரிதும் மகிழ்ந்தேன்.

கங்காதரனது கடைசி வணக்கங்களின் அர்த்தம் இப்போது விளங்கியது. எனது உள்ளம் மகிழ்ச்சியாற் பொங்கியது. எனது பூரிப்பு முழுதையும் சந்திராவிடம் காட்டிவிட வேண்டுமென்ற ஆவல் தவிப்புத் தந்தது. தவிப்பை நிறைவேற்றத் தருணங் காத்திருந்தேன். மத்தியானம் பன்னிரண்டு மணிக்கு வகுப்பை விட்டு வெளியே வந்தபோது சந்திரா வீடு நோக்கலானாள்.

திருப்பி அழைக்கும் தைரியம் என்னை விட்டகன்று எங்கோ வேகமாயோடியது. காரணம் 'சந்திரா கல்லூரியை விட்டு விடுவதாக அறிவித்தல் கொடுத்துவிட்டு வீட்டிற்குச் செல்கிறாள்' என்ற செய்தியை அவள் வகுப்பு நண்பர்கள் 'கசமுச' வென்று இரகசியமாக ஆனால் விரைவாகப் பரப்பிக்கொண்டிருந்தமைதான்.

அதன்பின் அவள் கல்லூரிப்பக்கம் கால் வைக்கவேயில்லை.

எனக்கு மறுவாரம் பரீட்சையிருந்தது. பரீட்சை முடிந்ததும் விடுமுறை நாட்கள். விடுமுறையின்பின்னர் கலாசாலைக்குப் போகவேண்டிய தேவை யெனக்கென்ன?

நீண்ட ஓய்வு பெற்றுக்கொண்டுவிட்டேன்.

—தொடரும்

# மாலைவரும் முன்னே அவர் வருவார் பின்னே!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தென்றும் சில ஜி.ஜி. தாசர்களான பெரியார்கள் பிரசாரம் செய்து வருகின்றனர். பொன்னம்பலமவர்கள் ஒவ்வொருவரிடமும் போய் என்னை யாது செய்யும்படி கேட்கிறீர்கள்?' என்று கண்கலங்கிக் கேட்கும் காட்சி பலர் மனதை உருக்கிவிட்டதாம். ஒருவன் எத்தகைய பெருந்தவறிழைத்தவனுயினும் தான் செய்தது பிழை என்பதை உணரும்போது அவனுக்கு மன்னிப்பு வழங்குவது தமிழர் பண்பு. இந்த உணர்ச்சி தலையெடுத்து விட்டபடியால் திரு. பொன்னம்பலத்துக்கு ஆதரவு இன்னும் பெருகுமென்றே சொல்லவேண்டும்.

### கத்தோலிக்கர் நம்பிக்கை

தமிழரசுக் கட்சி டாக்குத்தர் நாகநாதன் அவர்கள் கொம்யூனிஸ்டுக்களுடன் உறவு பூண்டு தமிழர் கலாசாரத்துக்கு உலைவைக்க முற்பட்டுவிட்டதைக் கத்தோலிக்க வாக்காளர்கள் நன்கு உணர்ந்துவிட்டனர். இலங்கையிற் பிரசுரமாகிவரும் ஒரேயொரு தமிழ்க் கத்தோலிக்கப் பத்திரிகையானது தமிழ்க் காங்கிரஸையே ஆதரித்து ஆசிரியவசனம் தீட்டியிருக்கின்றது. அப்பத்திரிகை எழுதியிருப்பதாவது: "ஆகவே நமது சமய விஷயமாகவோ, சமூக விஷயமாகவோ, தமிழ்ப்பாஷை விஷயமாகவோ, நல்வாவு விஷயமாகவோ நமக்குச் சுதந்திரமும் சமத்துவமும் அளிக்க முன்வந்துள்ள அரசாங்கக் கட்சியை ஆதரிக்கின்ற தமிழ்க் காங்கிரஸ் கட்சியைத் தமிழ் மக்கள் ஆதரிப்பது மதியூகமான செயலென்றே நாம் தயங்காது கூறுகின்றோம்."

இதுநிற்க, கொழும்பிலுள்ள அரசாங்க குமாஸ்தாக்களும் ஏனைய அரசாங்க உத்தியோகஸ்தர்களும் சும்மா சும்மா வகுப்பு வாதத்தைக் கிளப்பித் தமிழர் வாழ்வில் மண்போடுவது அபாயமானதென்பதை உறுதியாக நம்பிவிட்டனர் என்பது கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்திறங்கும் 'கிளறிக்கல்' உத்தியோகத்தர்களின் பேச்சுக்களிலிருந்து அறியக் கிடக்கின்றது.

### காங்கேசன்துறை

காங்கேசன்துறைத் தொகுதி யு. என். பி. அபேட்சகர் திரு. சு. நடேசனை ஆதரித்துப் பல பகுதிகளிலும் கூட்டங்கள் நடை பெறுகின்றன. பிரதமர் டட்லி யாழ்ப்பாணம் வராமைக்குக் காரணம் யாதென்பதைப் பற்றி ஆராயப் புகுந்த கொழும்பு வாரப் பத்திரிகை யொன்று தன் கற்பனைக் குதிரையை அதிகம் தட்டிவிட்டிருக்கிறது! சென்ற தேர்தலிலும் பார்க்க இம்முறை திரு. நடேசனுக்கு அதிகமான ஆதரவு நாளாந்தம் பெருகிவருவது உண்மையே. சமீபத்தில் அளவெட்டியில் நடைபெற்றகூட்டத்தில் திரு. நடேசன் மிக உருக்கமாகப் பேசித் தமது கட்சியில் நியாயமிருக்கின்றதென்பதைப் பசுமரத்தாணிபோற் படியச்செய்திருந்தார். தமிழரசுக் கட்சியினர் கொம்யூனிஸ்ட்டுகளின் ஆதரவைத்தேடித் தமிழினத்தைக் காட்டிக்கொடுக்க முன்வந்துள்ளனர் என்பது இப்போது வெட்டவெளிச்சமாகிவிட்டது. போதாக்குறைக்கு இலங்கை இந்தியக் காங்கிரஸின் பணப்பையிலிருந்தும் தமிழரசுக்குப் பணம் கிடைத்திருப்பதைப்பற்றிப் பலரும் பலவிதமாகப்பேசித் தமிழரசுக்கட்சித் தலைவரின் 'நேர்மை, யோக்கியம்' என்பன இப்போது எங்கேயென்று தமிழரசுக்கூட்டங்களிற் கேட்கத் தலைப்பட்டுவிட்டனர்.

தெல்லிப்பழையிலேயே திரு. நடேசனுக்கு ஆதரவு பெருகிவருவதைத் தமிழரசுக் கட்சியினரே ஒத்துக்கொள்ளுகின்றனர்.

### ஊர்காவற்றுறை

ஊர்காவற்றுறையிற் சென்ற வாரம் தண்ணீர்க்குழாய் ஒன்றைத் திறக்கவந்த உள்நாட்டு மந்திரி சேர் ஒலிவர் குணதிலகா தமிழ்க்காங்கிரசுக்காக அதிகம் பாடுபட்டுப் போயிருக்கிறார். அவர் அல்பிரட் தம்பியையாவுக்கு ஒரேயடியாகப் புகழ் மாலைகளைச் சூட்டினார். இங்கு திருவாளர்கள் தம்பியையா, கிளப் பாலசிங்கம், தியாகராசா ஆகியோருக்கிடையிற்றான் போட்டியிருக்கிறது. திரு. சேனாதிராசாவைப் பற்றியோ தமிழரசு நவரத்தினம் பற்றியோ பேச்சு அதிகம் அடிபடக்காணவில்லை.

தியாகராஜா அவர்களுக்குக் காரைநகரிற் செல்வாக்கு அதிகம் என்பது உண்மையே. திரு. தம்பியையாவுக்கோ சப்ததீவுகளிலும் ஆதரவிருப்பதாகச் சொல்லப்படுகின்றது. திரு. பாலசிங்கமும் நம்பிக்கையுடன் உழைத்துவருகின்றார்.

### சாவகச்சேரி

திரு. வி. குமாரசாமியை எவருமே அசைக்கமுடியாதெனப் பொது சனம் எண்ணியிருந்த எண்ணத்தைத் தமிழரசுக்கட்சியின் கார் ஓட்டம்

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)


## யாழ்ப்பாணம் ஐக்கிய லாப நிதி

**1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.**

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

**இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம்**

**ரூபா 34,36700. 100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.**

**பங்குப் பணம் கட்டுமுறை:**

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாதந்தோறும் கட்டப்பட வேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்று வரவு:**

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமாறு ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்று வரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்:**

க்ஷேமப் பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம் 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்:**

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.

இந்தியா நோட்டுவட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

**கடன்:**

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்

[4586]




அன்பான மருமக்களே,

வணக்கம், உங்களில் அநேகரின் கடிதங்களுங் கட்டுரை, கதைகளுங் கிடைத்தன. அவற்றையெல்லாம் பார்வையிட்டுப் பதில் எழுத முடியாத நிலையில் இருக்கின்றேன். அனைவருக்கும் விபரமான பதில் விரைவில் எழுதுவேன். சில மருமக்கள் வடபகுதியிற் போட்டியிடும் அபேட்சகர்களைப் பற்றி எழுதி அனுப்பியிருக்கின்றனர். அவற்றையெல்லாம் படித்து நான் மகிழ்ந்தேன்.

கேசரிமாமா

## புதியமருமக்கள்

மே. 622. க. செல்வரத்தினம்; தோப்பு, அச்சுவேலி,

கி. 623. சி. குமாரலிங்கம் C/o திரு. சிதம்பரப்பிள்ளை, ஆசிரியர் மீசாலை.

## பிறந்ததின வாழ்த்துக்கள்

25-5-52—31-5-52

மே. 12. ஆ. கணபதிப்பிள்ளை, மே. 160. பொ. விஷ்ணு, மே. 385. து. சர்வேஸ்வரன், மே. 423. செ. மகேஸ்வரி, மே. 586. க. கணேசலிங்கம்.

மேற்குறித்த எனது மருமக்கள் இன்றுபோல் இன்னும் பல்லாண்டு வாழ்வார்களாக.

இலக்கியச் செல்வம்—18

# திரிகடுகம்

கே. எஸ். கிருஷ்ணன்

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்ருகிய திருக்குறளைப் பற்றிச் சிறிது அறிந்துள்ளோம். இனி, திரிகடுகம் என்ற நூலைப்பற்றி அறிந்து கொள்வோம்.

திரிகடுகம் என்ற நூலைச் செய்தவர் நல்லாதனுர் என்ற புலவர். இந்நூல் கடவுள் வாழ்த்து ஒரு வெண்பாவும், நூல் 100 வெண்பாக்களுமாக 101 வெண்பாக்களைக் கொண்டது.

இந் நூலினது கடவுள் வாழ்த்துக் கண்ணனைப் போற்றுகின்றமையால் நூலாசிரியர் திருமாலடியார் என்று கருதப்படுகிருர்.

இந்நூலிலுள்ள ஒவ்வொரு வெண்பாவும் மூன்று மூன்று விஷயங்களைத் தொகுத்துச் சொல்லுகின்றது. அந்த மூன்று விஷயமும் திரிகடுகம் போன்றுள்ளமையால் இந்நூலுக்குத் திரிகடுகம் என்ற உவமையாகு பெயர் வந்தது. அதாவது, சுக்கு திப்பிலி மிளகு எனப்படும் திரிகடுகம் தேகாரோக்யத்தைக் கொடுப்பதுபோல, மும்மூன்று விஷயங்களைக் கொண்ட ஒவ்வொரு வெண்பாவும் மனத்தினமைதியைக் கொடுக்கும் என்பது கருத்து.

இந் நூலின் முதல் வெண்பாவில் திரிகடுகம் என்ற சொல்லை ஆசிரியர் ஆண்டிருக்கிருர்:-

அருந்ததிக் கற்பினர்
தோளும், திருந்திய
தொல்குடியின் மாண்டார்
தொடர்ச்சியும், சொல்லின்
அரிலகற்றுங் கேள்வியார்
நட்பும், இம்மூன்றும்
திரிகடுகம் போலும் மருந்து.

இவ் வெண்பாவில் வந்துள்ள திரிகடுகம் என்ற சொல்லே இந் நூலின் பெயராக அமைந்திருக்கிறது.

டிக்வின்ஸி (De Quincey) என்ற ஆங்கில இலக்கியவாணர் இலக்கியத்தை அறிவு புகட்டும் இலக்கியம் (Literature of Knowledge, அல்லது Didactic Literature) என்றும், ஆர்வம் நிறைந்த இலக்கியம் (Literature of Power) என்றும் இரு பிரிவாகப் பிரிக்கின்ருர். அதே போல, தமிழிலும் இலக்கியப் பொருளைப் புறப்பொருள் அகப்பொருள் என இரண்டு பிரிவாகப் பிரிக்கிருர்கள். புறப் பொருளிலக்கியத்தை அறிவு புகட்டும் இலக்கியமென்றும் அகப்பொருள் இலக்கியத்தை ஆர்வம் நிறைந்த இலக்கியமென்றும் கூறுவது பொருத்தமாகும். திரிகடுகம் அறிவு புகட்டும் இலக்கியவினத்தைச் சேர்ந்தது.

இந் நூலிலுள்ள வெண்பாக்கள் மிக எளிதாகப் பாடமாக்கத் தக்கவை, ஆழ்ந்த கருத்தமைந்தவை, உயரிய நோக்குள்ளவை. உதாரணமாக இவ்விரண்டு வெண்பாக்களையும் பாருங்கள்:-

முந்தையெழுத் தின்வரவு,
உணர்ந்து பிற்பாடு
தந்தையும் தாயும்
வழிபட்டு—வந்த
வொழுக்கம், பெருநெறி
சேர்தல், இம் மூன்றும்
விழுப்ப நெறிதூரா வாறு. (56)

இளமையிற் கற்றல், பெற்ருேரைப் பேணுதல், நன்நெறியில் ஒழுகுதல் இம் மூன்றும் சிறப்பைத் தரும் என்பது கருத்து.

இது மற்ருெரு சிறந்த வெண்பா:-

சான்ருேருட் சான்ரு
னெனப்படுதல், எஞ்ஞான்றும்
தோய்ந்தாருள் தோய்தா
னெனப்படுதல்
—பாய்ந்தெழுந்து
கொள்ளாருட் கொள்ளாத
கூருமை, இம் மூன்றும்
நல்லாள் வழங்கு நெறி, (82)

## மாதரசி மொன்ரிஸோரி.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கல்வி முறையால் நன்கு கவனிக்கப் படுகின்றது. வெளியிடங்களிற் சென்று தோட்ட வேலை செய்தல், கைத்தொழில் வேலைகளைச் செய்தல் என்பனவும் இக்கல்வி முறையில் விசேஷ இடம் பெறுகின்றன.

### குழந்தைகள் சுவாதீனம்

குழந்தைகளை விளையாடவிட்டும் அவர் மனஞ் சென்ற வழிப் போகவிட்டும் அவர்கட்கு ஏற்ற கல்வியை மிக அற்புதமான முறையில் பயிற்ற இக் கல்வி முறை உதவியாகின்றதாகும். மாணவர்க்கு இக்கல்வி முறையில் பெரிய சுவாதீனம் அளிக்கப் படுகின்றது. ஆனுல் இந்தச் சுவாதீனம் அவர்களைக் கிரமந் தவறிக் கீழ்படியாதிருக்கச் செய்வதில்லை. குழந்தைகள் கல்வி கற்க விருப்பமுடையர்; சூழ்நிலையை நோக்கி அறிய விருப்ப முடையர்; தாமாகச் செய்து பார்க்க வேண்டுமென்ற விருப்புடையர். இதை நன்கறிந்த மொன்ரிஸோரி அம்மையார் அவைகளைத் துணையாகக் கொண்டுகுழந்தைகளின் ஆரம்ப சக்திபழுதடையாது,சுவாதீனத்தை அவர்கட்கு அளித்து அவர்கள் வழிச்சென்று அவர்களை வழிப்படுத்திக் கல்வியூட்டும் சிறந்த முறையைக் கண்டு பிடித்தனர். எவ்வித பல வந்தமும் குழந்தைகள் மீது ஏற்படக் கூடாது; குழந்தைகளைப் பிரம்பு கொண்டு அடித்தல் முற்ருக விலக்கப் பட்டது. எப்போதும் அன்பாகவும் ஆதரவாகவும் அவர்கள் பயிற்றப்படவேண்டும் என்பதை வற்புறுத்தி வந்தனர். குழந்தையின் முனைப்புக் கெடாது பாதுகாக்கப் படவேண்டும் என்பதையும் நன்கு விளக்கினர். எனவே இவ்வரிய கல்வி முறையை உலகுக்குத் தந்துதவிய இவ்வம்மையார்க்கு உலக மக்களின் நன்றி என்றும் உரியதாகுக.

### சன சமூக நிலையம்

கோப்பாய் சூரியோதய சன சமூக நிலையத்தின் மாதாந்த நிருவாக சபைக் கூட்டம் சமீபத்தில் தலைவர் திரு: வே. க. சின்னப்பு அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 6887.

வண்ணர்பண்ணை கிழக்கு நீராவியடி
நாகப்பர் கனகரத்தினம்
வழக்காளி

வேலணை மேற்கு
1. முத்து கணபதி
சின்னத்தம்பு
2. பெண் வள்ளியம்மை
எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 6887-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் மூன்று துண்டுக் காணிகளை 1952-ம் ஆண்டு ஜூன் (ஆனி) மாதம் 18-ந் திகதி (18-6-52) புதன் கிழமை முற்பகல் $10\frac{1}{2}$ மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை— முதல் வட்டி ரூபாய் 3395-95-ம் இதில ரூபாய் 3000/க்கு 4-8-50 திகதி தொடக்கம 3-11-50 திகதி வரைக்கும் 100-க்கு 7 வீதவட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத தொகைக்கும் இறுபடுமலரையும் 100-க்கு 5 வீத வட்டிக்கும், கோட்டுச் செலவு ரூபாய் 242-44 சதம். இதில் ரூபாய் 120/தும் இன்னும் ரூபாய் 1000/ம் இறுபட்டது.

### காணிகளின் விபரம்


1. வடமாகாணம டிஸ்திறிக் தீவுப்பகுதி வேலணைக் கோவிற்பற்று வேலணை மேற்கிறை. 'நெல்வி கின்றமும் மேற்கு வெல்லடியும்' நெற்பரப்பு 18 ஆனுல் அளவுப்படியும் ஆட்சிப்படியும் நெற்பரப்பு இருபது (20-) எல்லை; கிழக்கு, ஒழுங்கை. வடக்கு, குளம். மேற்கு, குளமும் நாகலிங்கம் பரஞ்சுபசிங்கத்திற்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். தெற்கு, நாலிங்கம் பரஞ்சுபசிங்கத்திற்கும் பங்காளருக்கும் மற பேருக்குமுரிய ஆதனம் இதடங்கலும. முற்பதிவு C 157/215

2. மேற்படி வேலணை மேற்கிறை "ஆலம்புலம் புரிவும் ஆலம்புலம மேற்கும்" நிலப் பரப்பு ஒன்பது (9-ம) குளி $4\frac{1}{4}$-ம். வீடும் பனைகளும கிணற்றுப் பங்கும். எல்லை: கிழக்கு; மருதப்பு சதாசிவத்தின் ஆதனம். வடக்கு, சதாசிவம் பெண் சீவரத்தினத்திற்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். மேற்கு, செல்லத்துரை பெண் நாகம்மாவின் ஆதனம். தெற்கு, செல்லத்துரை பெண் நாகம்மாவுக்கும் முத்து கணபதிக்கும் சின்னத்தம்புவுக்குமுரிய ஆதனங்கள். இதடங்கலும. முற்பதிவு C $\frac{218}{167}$.

3. மேற்படி வேலணை மேற்கிறை "அகாலசப்பநத்தை" நிலப்பரப்பு 17-ம, குளி 12-ம். இதில் வடக்குப்பக்கமாக நிலப்பரப்பு 8-ம். குளி 15-ம் சிவஞானம்மாவுக்கு சீதனம் கொடுபட்டது நீக்கி மிகுதி நிலப்பரப்பு 8-ம் குளி 15-ம் எல்லை கிழக்கு, ஒழுங்கை. வடக்கு, சேனதிராசா பெண் சிவஞானம்மாவின் ஆதனம். மேற்கு, ஒழுங்கை. தெற்கு, முருகர் மருதையினரின ஆதனம இதடங்கலும்.
முற்பதிவு C $\frac{244}{225}$.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed
Auctioneer
தெல்லிப்பழை 5-5-1952
[4606]

இப் பதத்திரிகையில் வெளியாகும் ஹாஸ்யக் கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.



The
# EeLAKESARI
T'Phone No. 8
NATIONALIST TAMIL WEEKLY
Largest circulation in Ceylon, India, Burma & Malayan Union
Founder: N. PONNIAH

Vol. 22 | Chunnakam, Sunday, May 25, 1952 | No. 44

**சந்தா விபரம்**

ஆண்டுச் சந்தா:
இலங்கை-இந்தியா ரூ. 6-00
மலாயா — $ 6-00
தனிப் பிரதி சதம் 10. காசு 10

## மாலைவரும் முன்னே ...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

களும்] மாபெரும் கூட்டமும் அதிரச் செய்திருக்கின்றன. திரு. குமாரசுவாமிக்குக் காசுச் செலவை உண்டுபண்ணுவதும் தலையிடியை அதிகரிக்கச் செய்வதுமே தமிழரசுக்கட்சியினரின் நோக்கமென விஷயமறிந்தவர்கள் பேசிக்கொள்ளுகின்றனர். கச்சாய்ப்பகுதியிலுள்ள சிறுவர்கள்கூடக் 'குமாரசுவாமி மாமாவைத்தான் கவுன்ஸிலுக்கு அனுப்பவேண்டும்' என்று சொல்லி ஒரு கையிற் கொடிபிடித்துக்கொண்டு ஓடித்திரிகின்றனராம்.

திருகோணமலையில் ஒரு வேளை தமிழரசு அபேட்சகர் வெற்றிபெற்றால் அந்த அதிர்ச்சியிற் சாவகச்சேரி அருணாசலம் அவர்களுக்கும் யோகம் அடிக்கக்கூடுமென்ற நம்பிக்கை தமிழரசுக் கட்சியினரிடம் இருந்து வருகின்றது. ஆனால் திரு. குமாரசுவாமியின் கட்சியினர் இவ்விதமான சிறுபிள்ளைத் தனமான விஷயங்களில் ஈடுபடாமல் ஆக்க வேலைகளிற் கவனம்செலுத்தி வருகின்றனர்.

சென்ற வியாழக்கிழமை திரு. குமாரசாமியை ஆதரிக்கு முகமாகச் சாவகச்சேரியில் நடைபெற்ற மாபெருங் கூட்டம் குறிப்பிடத்தக்கது.

### பருத்தித்துறை

பருத்தித்துறைத் தொகுதியில் தமிழ்க்காங்கிரஸ் அபேட்சகர் திரு. இராமலிங்கத்திற்கும் கொம்யூனிஸ்ட் கட்சி அபேட்சகர் திரு. கந்தையாவுக்குமிடையில் தான் துவந்த யுத்தம் நடந்துவருகிறது. திரு. கந்தையாவின் தீவிர முற்போக்குக் கொள்கைகளைப் பருத்தித்துறை திடீரென்று ஏற்றுவிடுமெனச் சொல்வதற்கில்லை.

திரு. நடராசாவின் கட்சியினருக்குத் தாராளமான செலவு ஏற்பட்டு வருவதாகத் தெரிகின்றது. சமசமாஜி பாலசிங்கம் அவர்கள் காலஞ்சென்ற தர்மகுலசிங்கத்தின் பெயரைச் சொல்லி ஆதரவு தேடுகின்றார். திரு. கந்தையா அவர்களும் தாம் (ஜெயம்) தர்மகுலசிங்கத்தின் நண்பன் என உரிமை பாராட்டி மிக வேகமாக முன்னேறி வருகின்றார்.

### கோப்பாய்

கோப்பாய்த் தொகுதியைப்பற்றிக் குறிப்பிடுமிடத்து இங்கு இடதுசாரி அபேட்சகர் திரு. ஆர். ஆர். தர்மரத்தினத்துக்காகத் 'தகநாயகா விளையாட்டு' அதிகம் நடைபெறுமெனத் தெரிகிறது. இந்த அபேட்சகரைப் பற்றி அதிகம் சலசலப்புக் காணப்படாவிடினும் அவர் பிணைப்பணத்தைத் திருப்பிப் பெறக்கூடிய அளவுக்காவது வாக்குகளைப் பெறுவார் என்பதில் நம்பிக்கையுண்டு. திரு. வன்னியசிங்கத்திற்கு ஆரம்ப காலத்தில் காணப்பட்ட ஆதரவில் ஒரு பகுதி இப்போது குறைந்துவிட்டது.

திரு. அருளம்பலத்தின் நிலைமை சீரடைந்து வருகின்றதென்றே கூறவேண்டும். இவருக்காகப் பல பிரமுகர்கள் நீர்வேலி கோப்பாய் போன்ற இடங்களில் அபிமானத்துடன் உழைத்து வருகின்றனர்.

### வட்டுக்கோட்டை

வட்டுக்கோட்டையில் இதுவரை திரு. வீரசிங்கம் அவர்களின் பெயரே பலமாக அடிபட்டது. தமிழரசுக் கட்சியின் அரசியற் குழந்தையென்று சொல்லப்படும் திரு. அமிர்தலிங்கம் அவர்களுக்கும் ஆதரவு இருப்பதாக எங்கும் ஒரேபேச்சு. ஆனால் இப்போது திரு. கனகரத்தினம் அவர்களைப்பற்றியே அபிமானமாகப் பலரும் பேசத்தொடங்கியிருக்கின்றனர். கொம்யூனிஸ்ட் அபேட்சகர் வைத்திலிங்கம் அவர்களும் ஹரிசன மக்களைக் கவர்ந்துள்ளார். திரு. உருத்திராவும் சும்மா இருக்கவில்லை.

### வவனியா-மன்னார்

இத்தொகுதிகளிற் பிரசாரக் கூட்டங்கள் மும்முரமாக நடைபெறுவதாயில்லை. மன்னாரில் இம்முறை 'உள்ளூர்' அபிமானம் ஓங்கி நிற்கின்றது. திரு. அழகக்கோன் ஊர்ப்பிறந்தவர் என்ற வகையில் வாக்காளர்கள் அவரை ஆதரித்து நிற்கின்றனர். எனவே, திரு. சிற்றம்பலம் அவர்கள்பாடு சங்கடமாகவே இருக்கின்றது.

வவனியாவிலே திரு. சுந்தரலிங்கம் திடசித்தத்துடன் இருந்து வருகின்றார். வவனியாத் தொகுதியில் மூவர் இவரை எதிர்த்துச் சத்தமிட்ட விடத்தும் திரு. சுந்தரலிங்கம் வாகை சூடுவார் என்பது திண்ணம். யூ. என் பி. கட்சி மீண்டும் ஆட்சிக்கு வருமிடத்துத் தாம் (திரு. சுந்தரலிங்கம்) அதில் மந்திரியாகப் பணியாற்றத் தயார் என்றும் திரு. சுந்தரலிங்கம் சில நண்பர்களுக்குத் தெரிவித்துள்ளார் என அரசியல் வட்டாரங்களிற் பேசப்படுகின்றது. இலங்கை எவ்விதமான ஆட்சியைப் பெறுமென்பது விரைவில் வெளிச்சமாகிவிடும்.

### கோட்டு விற்பனவு விளம்பரம்
### இல. 7417

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

**சங்கானை மேற்கு**

1. தம்பிஐயா சரவணபவன்
2. ,, சண்முகபவன்
3. ,, திரிபுரபவன்

1-3-ம் வழக்காளிகள் பராயமற்றவர் இவர்களின் கிட்டின உறவினர்.

4. தம்பிஐயா கைம்பெண் இரத்தினம்பாள்

வழக்காளிகள்

**சங்கானை கிழக்கு**

1. வயிரமுத்து கந்தையா
2. வயிரமுத்து தம்பிஐயா மகள் சுகிர்தலட்சுமி

**காங்கேசன்துறை**

3. தம்பையா சுப்பிரமணியம்
4. பெண் செல்லமுத்து

எதிராளிகள்

**சங்கானைமேற்கு**

5. வல்லிபுரம் தம்பு
6. பெண் இரத்தினம்

கூட்டு எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 7417-ம் இலக்கப் பிரிவிடல் வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1952-ம் ஆண்டு ஜூன் (ஆனி) மாதம் 14-ந் திகதி (14-6-52) சனிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று முதலாவது காணிப் பங்காளருக்கிடையில் மதிப்புத தொகையிலிருந்தும் அவர்கள் கேட்கத்தவறின உடனே பிரசித்த ஏலத்திலும் விற்கப்படும்.

**காணியின் விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதி வட்டுக்கோட்டைக் கோவிற்பற்று வட்டுக்கோட்டை கிழக்கிறை "கமறவிலக்கை" நிலைப்பரப்பு ஐந்து (5-ம்) கிழக்கெல்லைக் காணிக்குள் இருக்கும் கிணற்றில் $\frac{1}{4}$ பங்கும் தூர்வைவழி வாய்க்காலும் இது 1951-ம ஆண்டு சித்திரை மாதம் 30-ந் திகதி உலாந்தா சீ. யே. சபாபதியால் வித்தாரிக்கப்பட்ட 1452-ம் இலக்கப் படத்தின் படி நிலைப்பரப்பு நாலு (4-ம்) குளி 15-ம் மற்றும் பயிர்களும். எல்லை, கிழக்கு தம்பு பெண் இரத்தினத்தின் ஆதனம். வடக்கு, சங்கானை மேற்கு ஊரெல்லை. மேற்கு, கந்தர் பொன்னம்பலத்தின் ஆதனம். தெற்கு, விசுவநாதர் பொன்னம்பலத்தின் ஆதனம் இதடங்கலும்.

பெறுமதி ரூபா 1232-00

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed Auctioneer.

தெல்லிப்பழை, 19-5-52, [4607]

### கோட்டு விற்பனவு விளம்பரம்
### இல. 7896

சங்கானை
சின்னத்தம்பி ஆசைப்பிள்ளை
வழக்காளி

மாதகல்
ஐயன் முத்தன்
எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோடடில் 7896-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகளை, 1952-ம் ஆண்டு ஜூன் (ஆனி) மாதம் 28-ந் திகதி (28-6-52) சனிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத் தொகை:**— முதல் வட்டி ரூபாய் 757/-ம், இதில் ரூபாய் 400/-க்கு 20-6-51 திகதி தொடக்கம் 20-9-51 திகதி வரைக்கும் 100-க்கு 12 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும்.

**காணிகளின் விபரம்**

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி பண்டத்தரிப்புக் கோவிற்பற்றுச் சில்லாலையிறை "அதிகமானவிடத்தல்" ஏக்கர் ஒன்று றூட் மூன்று பேச்செஸ் ஒன்று. எல்லை: கிழக்கு, இராசா பெண் தங்கமுத்துவின் ஆதனம். வடக்கு, கந்தர் ஆறுமுகத்தின் ஆதனம். மேற்கு, றோட்டு. தெற்கு, விசுவநாதர் கைம்பெண் தங்கமுத்துவின் ஆதனம். இதில் சொரியலாய் ஐந்தில் மூன்று பங்கு ($\frac{3}{5}$). முற்பதிவு E 202/300.

2. மேற்படி பண்டத்தரிப்புக் கோவிற்பற்று மாதகலிறை "அரியனுவிடத்தலடி" நிலைப்பரப்பு 11-ம் கிணறும் பனைகள் தென்னைகளும செய்பயிர் வான் பயிர்களும். எல்லை: கிழக்கும், வடக்கும் சின்னத்தம்பி பர்ராக்துவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். மேற்கு, றோட்டு. தெற்கு பிரூஞ்சி சந்தியாவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம. இதிற் சொரியலாய் அரைவாசி ($\frac{1}{2}$).

முற்பதிவு E 207/175.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed Auctioneer

தெல்லிப்பழை 28-4-1952
[4605]


### வவனியா ஆசிரியர் சங்கம்

சென்ற 17-5-52-சனிக் கிழமை வவனியா அரசினர் ஆங்கில சியேட்ட பாடசாலை மண்டபத்தில், வித்தியாதரிசி திரு. ஏ அருளையா அவர்கள் தலைமையின வவனியா வட்டார ஆசிரியர் சங்க ஆண்டு விழா நடைபெற்றது. தேகப்பயிற்சி வித்தியாதரிசி ஆர். டி. இரத்தினசிங்கம் அவர்களும், வித்தியாதரிசி திரு. அருளையா அவர்களும் விரிவுரைகள் ஆற்றினர்.

பின்வருவோர் சங்க உத்தியோகத்தராகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: வித்தியாதரிசி திரு. ஏ. அருளையா. காரியதரிசி: திரு. செ. சிவலிங்கம். உபகாரியதரிசி: திரு. எஸ். பொன்னம்பலம். தனாதிகாரி: திரு. எஸ். வி. சின்னத்தம்பி. நிர்வாக சபையும் அமைக்கப்பெற்றது

"லக்ஸ் டாய்லட் சோப் உபயோகிப்பது தான் எனது அழகு பராமரிப்பு"

என்று கூறுகிறார்
ரெஹானா




இனிய மணத்துடன்கூடிய இந்த வெண்மையானதும், சுத்தமானதுமான சோப் உங்கள் சருமத்தை வசீகரமாகச்செய்யும்!

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப் ★

LTS. 360-X52 TM

இப்பத்திரிகை, இதன் சொந்தக்காரருக்காக, யாழ்ப்பாணம்—குரும்பசிட்டி, முத்தையா-சுபாரத்தினம் அவர்களால் சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தில் 1952-ம் ஆண்டு மே மீ 25-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.